# சம்பளக்கமிஷன் இரண்டாவது அறிக்கை அமுல்

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119 தந்தி: வைரம்

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ்: 38
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் பங்குனி 7 முஹர்ரம் 11 வெள்ளிக்கிழமை [20-3-70]

அன்டன்
ஸ்லொற்றெட் ஆங்கிள் அயன்
(SLOTTED ANGLES)
1 1/4" x 1 1/4", 3/4" x 1"
1 1/2 x 1 1/2, 2 1 4 x 1 5/8"
அளவுகளில் கிடைக்கும்.
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு
கொடுக்கப்படும்
யாழ். நகர விநியோகஸ்தர்கள்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7130

## மந்திரிசபை தீர்மானம்

கோட்டை, வியாழன்
சம்பளக்கமிஷன் சமர்ப்பித்த இரண்டாவது இடைக்கால அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டதால் அதனைக் கடந்த வருடம் அக்டோபர் மாதம் முதலாந் திகதியிலிருந்து அமுலாக்குவதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

திரு. எல் பி. டி. சில்வாவின் தலைமையிலான சம்பளக் கமிஷன் தாக்கல் செய்த இடைக்கால அறிக்கை பற்றி மந்திரிசபை கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விதவைகள், பெற்றாரை இழந்தவர்கள், ஆசிரியர்கள் பேன்ஷேரின் பென்ஷன் சம்பந்தமாக இந்தக் கமிஷன் தெரிவித்துள்ள சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. முன்னைய அறிக்கையில்இடம்பெறாத அரசாங்க அதிகாரிகளின் குறைகள் சம்பந்தமாகவும் இந்த அறிக்கையில் சிபாரிசுகள் அடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு அக்டோபரிலிருந்து இந்தச் சிபார்சுகளை அமுலாக்குவதென மந்திரிசபை முடிவுசெய்திருக்கிறது.

## தேசிய இளைஞர் சேவை

# யுத்தப் பயிற்சிக்காக அல்ல; தேச நலனுக்காக சேருங்கள்

## பளையில் ராஜாங்க அமைச்சர்

— நமது மட்டுவில், மல்லாகம் நிருபர்கள் —

ஏனைய நாடுகளில் யுத்தப் பயிற்சிக்காக இளைஞர்கள் திரட்டப்படுகிறார்கள். ஆனால் எமது நாட்டில் தொண்டு அடிப்படையில் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சேரவேண்டுமென்பது கட்டாயமில்லை. ஆனால் தேச நலனுக்காக இளைஞர்கள் இதில் சேர்ந்து நாட்டை முன்னேற்றவேண்டும்'

பளை பச்சிலைப்பள்ளிப் பிரிவில் தேசிய இளைஞர் சேவை இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு கூறினார். திரு. ஜெயவர்த்தன மண்வெட்டியால் மண்ணைவெட்டி வீதி ஒன்றை அமைக்கும் வேலையை ஆரம்பித்துவைத்தார்

சரை வரவேற்றனர்

ராஜாங்கஅமைச்சர் தமது உரையின் ஆரம்பத்தில் தமிழில் பேசினார், 'தமிழில் என்னால் நன்றாகப் பேசமுடியாது இதனால் நான் ஆங்கிலத்தில் இன்று பேசப்போகிறேன் எனது தாயாருக்கு நன்றாகத் தமிழ் பேசத்தெரியும், அதனால் நானும் கூடிய விரைவில் உங்கள் முன் சமி

கூறினார்

மேலும் அமைச்சர் பேசியதாவது:-

இரத்தினபுரி குருவித்தை என்னுமிடத்தில் பிரதமரும் நானும் அண்மையில் பெண்களுக்கான தேசிய இளைஞர் சேவைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்ததன் மூலம், பெண்களையும் மண்வெட்டி சுமந்து தேச

எனக் கேட்டுக்கொள்கிறேன்

நாட்டின் இளைஞர்மீது நல்ல முதலீடு செய்ய 5 கோடி ரூபாவரை நமது அரசாங்கம் செலவிடவேண்டியுள்ளது, இவ்வியக்கம் மூலம் கட்டுப்பாடு கடமை கண்ணியம் மிகுந்த இளைஞர்களை நாம் உருவாக்க முடிகின்றது அரசியல் கலப்பின்றி இன மத மொழி வேறுபாடின்றி ஒன்றினைந்த சமூகமாக ஒரே நாட்டின் பிரஜை என்ற ரீதியில் இளைஞர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்,

நாட்டில் 25 லட்சம் இளைஞர்கள் 14-25 வயதுக்கு மிடைப்பட்டவர்களாகயிருக்கின்றனர் 14 வயதுக்குப் பிறகு கட்டாயக்கல்வி நிர்ப்பந்தமில்லை, இதனால் 80 சத வீதமான இளைஞர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்துவிலகிவிடுகின்றனர், 5 சத விகித மாணவர்கள் மட்டும் பல்கலைக்கழகம் புகுகின்றனர் வேலையில்லாதிருக்கும் பெருந்தொகையான இளைஞர்களை தொழிற்கல்வியில் ஈடுபடுத்துவதற்காகவே இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது

### தொழிற்கல்வி வசதி கிடைக்கும்

இத்திட... இளைஞர்களுக்கு ...

...சேர்ந்து சேவையாற்ற இளைஞர்கள் தயங்கக் கூட...

## உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி
ஏழாலை-மத்தி வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் வருகிற ஏப்ரல் மாதம் 11-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இதனால் ஆண்டு தோறும் பங்குனி மாதத்து கடைசித் திங்கட்கிழமைநடைபெற்று வந்த குளிர்ச்சி இவ்வருடம் இம்மாதம் 30-ம் திகதி (அதாவது பங்குனி 3ம் திகதி திங்கட்கிழமை) நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோலல்லாது இம்முறை முருகப்பெருமான் திருவுருவத்தோடு விநாயகப்பெருமானும் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். குளிர்ச்சி விழாவுக்கு முதல்நாள் இரவு அம்மனுக்கு விசேஷ பூசைகள் நடைபெறும்.

## நாளை திறப்புவிழா

கோப்பாய், வெள்ளி
கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியின் ஆண் நோயாளர் விடுதிப் புதிய கட்டடத்தை நாளைமாலை 3 மணிக்கு சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம்திறந்துவைப்பார்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி
நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 290-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள்வருமாறு:-

1-வது பரிசு
25 Q 0941 ரூ 100,000

2-வது பரிசு
31 E 0129 ரூ 40,000

3-வது பரிசு
05 A 0430 ரூ 10,000

தலா ரூபா 558 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

12 J 0430
27 X 0765
28 T 0478
43 U 0025
30 B 0466
07 W 0752
08 F 0767
32 U 0211
06 N 0640
31 S 0574
32 W 0364
06 V 0103
29 R 0991
25 L 0586
34 M 0338
42 E 0530
04 V 0094
12 D 0811
25 J 0832

27 A 0465
14 L 0570
18 E 0774
14 Q 0197
03 G 0182
44 P 0780
41 Z 0748
05 W 0766
22 E 0257
19 T 0252
25 P 0484
24 o 0152
30 J 0018
30 R 0459
21 M 0755
42 U 0681
40 F 0652
04 H 0965
44 L 0147

36 T 0245
32 M 0348
24 F 0723
06 T 0027
02 C 0430
31 K 0208
01 R 0362
16 Z 0902
15 E 0936
30 J 0753
21 D 0242
43 N 0881
16 S 0738
14 M 0621
33 Q 0141
07 M 0127
17 G 0426
27 S 0199
26 A 0720
30 M 0046
32 o 0169
35 B 0413
26 Q 0748
03 V 0318
40 K 0343
20 Y 0596
25 M 0264
21 L 0011
28 X 0347
17 U 0249
22 o 0933

24 C 0167
38 N 0115
24 W 0235
37 A 0143
09 Z 0[illegible]66
04 L 0532
32 L 0537
13 K 0740
19 L 0141
05 R 0547
28 P 0239
12 [illegible] 0865
43 o [illegible]179
24 N 0219
05 S 0871
03 T 0549
36 W 0129
32 N 0447
29 o 0107
37 N 0107
25 o 0828
32 V 0999
17 G 0912
03 J 0657
38 E 0417
15 W 0802
33 W 0094
20 J 0597
15 X 0554
41 H 0040
09 S 0821

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்)

விரும்பப்படாத ஸ்தாபனமென்றால்

# உலகவங்கியிலிருந்து முன்னைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு கூறினர். திரு. ஜெயவர்த்தன மண்வெட்டியால் மண்ணை வெட்டி வீதி ஒன்றை அமைக்கும் வேலையை ஆரம்பித்துவைத்தார்.

பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி திரு. எஸ் அருணசலம் அமைச்சரை வரவேற்றார் பளைமகாவித்தியாலய மாணவிகள் சிங்களத்தில்வரவேற்புக்கீதம் பாடியும் தேசிய கீதம் இசைத்தும் அமைச்... யாது இதனால் நான் ஆங்கிலத்தில் இன்று பேசப்போகிறேன் எனது தாயாருக்கு நன்றாகத் தமிழ் பேசத்தெரியும், அதனால் நானும் கூடிய விரைவில் உங்கள் முன் தமிழில் பேச முயற்சிப்பேன். நீங்கள் இன்று சிங்களத்தில் கீதம் பாடி என்னை வரவேற்றதுபோல, விரைவில் நானும் உங்கள் முன்னிலையில் தமிழில் பேசுவேன்' என்று தமிழில் திரு. ஜெயவர்த்தன... நானும் அண்மையில் பெண்களுக்கான தேசிய இளைஞர் சேவைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்ததன் மூலம், பெண்களையும் மண்வெட்டி சுமந்து தேச நலனுக்காக உழைக்க வைத்துள்ளோம் இதே மாதிரியான பெண்கள் இயக்கம் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கிறேன், நீங்களும் இதற்கு ஒத்தாசை புரிய வேண்டுப...

வட பகுதி அசைஸ் விசாரணை

# சண்டிலிப்பாய் கொலை வழக்கு: இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன் சண்டிலிப்பாய் கொலை தீவைப்பு வழக்கு நேற்று பத்தாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இன்ஸ்பெக்டர் ஜேக்கப் சாட்சியமளித்தார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் சண்டிலிப்பாயில் 68-ம் ஆண்டு ஜன் மாதம் 4-ம் திகதி கந்தையா நாகராசா, சங்கரப்பிள்ளை திருவாதிரை, சரவணமுத்து அப்புராசா, முத்தையா தர்மலிங்கம், ஆறுமுகம் பொன்னுத்துரை, நல்லதம்பி துரைராஜா அல்லது துரையன், சுப்பிரமணியம் துரைராஜா ஆகியோர் மீது பொதுநோக்கத்துடன் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் தீ வைத்ததாகவும் கணபதி வைத்தி என்பவரை கொலை செய்ததாகவும் மொத்தம் 13 குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்பட்டுள்ளன.

1-ம், 2-ம் 3-ம், 5-ம். 6-ம், 7-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் என். சத்தியேந்திரா, அட்வகேட் இராஜராஜேஸ்வரன் தங்கராசா, அட்வகேட் எஸ். சிவபாக்கியநாதன் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர். 4-ம் எதிரி சார்பில் அட்வகேட் வி. ஜெகசோதி புறக்டர் எம் சிற்றம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிகளுககாக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ முத்துக்கிருஷ்ணன், நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல். டி. குருசாமி ஆஜரானா. பொலிஸ்கான்ஸ்டபிள் சமரசிங்காவும் சாட்சியமளித்தார். விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

கிழக்கு--மேற்குஜெர்மன் தலைவர்களின்

## சரித்திர முக்கியத்துவம் வாய்நத சந்திப்பு

பொன், மார்ச் 19

மேற்கு-கிழக்கு ஜெர்மன் பிரதம மந்திரிகள் இன்று சந்தித்துப் பேசுகிறார்கள்.

ஜெர்மனி இரண்டாகப் பிரிந்த பின்னர் இருதரப்புத் தலைவர்களும் இவ்வாறு கூடிப் பேசுவது இதுவே முதல் தடவை. இது ஒரு சரித்திரப் பிரசித்திபெற்ற சம்பவம் என்று கருதப்படுகிறது.

மேற்கு ஜெர்மன் பிரதம மந்திரி திரு. வில்லி பிரான்ட் இன்று கிழக்கு ஜெர்மனிக்கு ரயில் மூலம் புறப்பட்டுச் சென்றார். ''நல்லெண்ணத்துடன் புறப்பட்டு செல்கிறேன்'' என்று அவர் தமது பிரயாணத்தை ஆரம்பிக்கு முன்னர் கூறினர்.

மேற்கு ஜெர்மன் பிரதமர் திரு வில்லிபிரான்டும், கிழக்கு ஜெர்மன் பிரதமர் திரு. ஹெர்ஸ்டொஃபும் இன்று கிழக்கு ஜெர்மன் கரையோர நகரான எர்போர்ட்டில் சந்தித்துப் பேசுவார்கள். ஹெர்ஸ்டொஃப் ஏற்கனவே அங்கு போய்ச் சேர்ந்திருக்கிறார்.

## ஏப்ரல் 7-ல் புதிய தூதர் வருகிறார்

கோட்டை வியா

இலங்கைக்கு புதிய அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்ட திரு. ரொபேட் ஸ்ரௌஸ் கூப்பும் அவரது மனைவியும் ஏப்பிரல் 7-ம் திகதி இலங்கைக்கு வருகிறார்கள். இவர்கள் இருவருக்கும் அமெரிக்காவிலுள்ள இலங்கைத்தூதர் திரு ஒலிவர் வீரசிங்கி அமெரிக்காவில் சமீபத்தில் இராப்போசன விருந்து வைத்தார்.


அடைவு நகைகள்

பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி யாழ். கிளையில் (பிரதான வீதி) 1-11-1968-க்கு முன்பு அடைவுவைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 4-4-1970 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்

யாழ். கூட்டுறவு மாகாண வங்கி யாழ். கிளை 1995


## ... கிடைக்கும்

இத்திட்டத்தில் சேருவ[illegible] இளைஞர்களுக்கு [illegible] கல்வி வாய்ப்புக் கிட்டுகிறது வீட்டிலிருந்தே வேலை முகாமுக்குப் போய் தமது சொந்தக் கிராமத்தி[illegible] அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள இவ்வியக்கம் உதவுகின்றது

முதற்படியில் வேலைத்திட்டத்திலும், இரண்டாவது படியில் வேலையும்கல்விவசதியும் இத்திட்டம் மூலம் கிடைக்கின்றது தட்டச்சு தச்சுத்தொழில் கட்டிடத் தொழில போன்ற துறைகளிலும் பயிற்சி பெற வாய்ப்பளிக்கப்படுகிறது இதில் சேர்ந்து சேவையாற்ற இளைஞர்கள் தயங்கக் கூ[illegible]

### எம் பியில்லை

அரசாங்க அதிபர் திரு பீட்டஸ்ர்ஸ் தேசியஇளைஞர் சேவைக் கமிஷனர் திரு டி பி டி திஸநாயக்கா புலோபளை கிராமசபைத்தலைவர் திரு இராசசூரியர் ஆகியோரும் பேசினர் தொகுதி எம்பி பண்டிதர் கா பொ இரத்தினம் விழாவில்கலந்து கொள்ளவில்லை பளைச் சந்தியிலிருந்து அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார் (மல்-மட்டு)

## விமானநிலையத்தில் வரவேற்பு

யரழ்ப்பாணம், வெள்ளி ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன நேற்றுககாலை 8-30 மணிககு விமானமூலம் பலாலிவிமான நிலையத்தை வந்தடைந்தார். அமைச்சருடன் தேசிய இளைஞர் சேவை மன்றத் தலைவரான திரு. ஸி திஸநாயக்காவும், நல்லூர் எம் பி. திரு ஈ. எம். வி. நாகநாதனும் விமானத்தில் வந்திருந்தனர்.

அமைச்சரின் வருகையையொட்டி பலாலி விமான நிலையம் கோலாகலமாக அலங்கரிககப் பட்டிருந்தது விமானநிலையம் முன்னெப்பொழுதும் கண்டிராதவாறு இம்முறை புதுவிதத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்தது மகர தோரணங்களுக்குப் பதிலாக வாழைகுளாலும் நைலோன் வலைகளாலும் அலங்கரிக்கபட்டிருந்தது. மங்களவாத்தியங்களும் தேசியக்கொடிகளும் அமைச்சரை வரவேற்றன,

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு எவ் ஸி பீட்டர்ஸ், மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜே எம் சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு ரி. முருகேசம்பிள்ளை, யாழ்ப்பாண எம் பி திரு ஜி ஜி பொன்னம்பலம் உடுப்பிட்டி எம் பி யும் உபசபாநாயகருமான திரு எம் சிவசிதம்பரம், மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு கு தி இராசதுரைஆகியோர் அமைச்சரை வரவேற்றனர் முப்படை வீரர்கள் உட்படப் பல அரசாங்க உயர் அதிகாரிகளும் ஏராளமான பொதுமக்களும் அமைச்சரை வரவேற்க விமானநிலையத்திற்கு வந்திருந்தனர்.

விமானத்திலிருந்து அமைச்சர் இறங்கியதும் நயினதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கைலாயநாதக் குருக்கள் அவரை ஆசீர்வதித்தார் அடுத்து வண பிதா செல்வராசா ஆசீர்வதித்தார் தொடர்ந்து அரசாங்க அதிபர் அமைச்சருக்கு மாலை அணிவித்தார் திரு பொன்னம்பலமும் உபசபாநாயகரும் கைலாகு கொடுத்து அமைச்சரை வரவேற்றனர் யாழ்ப்பாண எம் பி பிரமுகர்களை அமைச்சருக்கு அறிமுகம் செய்துவைத்தார்

வலி வடக்கு காரியாதிகாரி திரு பி எல் பற்றிக் விமான நிலையத்தில் வைத்து அமைச்சரை வரவேற்றார்.

வடபகுதியில்இன்றுதேசிய இளைஞர் சேவை மன்றத்தை ஆரம்பித்துவைககும் அமைச்சர் வேறு பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்

### தமிழரசு எம்.பிக்கள் வரவில்லை

ராஜாங்க அமைச்சரை வரவேற்க தமிழரசுக் கடசி எம் பிக்கள் எவரும்விமான நிலையத்திற்கு வந்திருக்கவில்லை அமைச்சருடன் அதே விமானத்தில் வந்திறங்கிய டாக்டர் நாகநாதன் அமைச்சருடனேயே காரில் சென்றார்

---

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 17ந் திருவிழாவான இன்று மாலை பிக்ஷாடனேற்சவமும் மாலை 7-30வரை திரு.வி நல்லையாவின் கதாப்பிரசங்கமும், குதிரைவாகனத்தில் சுவாமி வீதிவலம் வருதலும் இரவு 8-30-9-30வரை திருமதி ராதா சோமசுந்தரத்தின் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

விரும்பப்படாத ஸ்தாபனமென்றால்

# 'உலகவங்கியிலிருந்து முன்னைய அரசாங்கம் ஏன் விலகவில்லை?'

## செனட்டர் நடேசன் கேட்கிறார்

கொழும்பு, வியாழன்

''உலக வங்கி விரும்பப்படாத ஒரு ஸ்தாபனமாக இருந்தால் ஏன் அதிலிருந்து முன்னைய அரசாங்கம் விலகிக் கொள்ளவில்லை?'' என்று செனட்டர் திரு. எஸ். நடேசன் செனட் சபையில் இன்று கேட்டார்.

செனட் சபையில் மகாவலி அபிவிருத்தி சபை மசோதா தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது. செனடர் நடேசன் விவாதத்தில் கலந்து கொண்டு பேசினர்.

அவர் மேலும் பேசுகையில், மகாவலி கங்கைதிசை திருப்பும் திட்டத்தின் வரலாற்றைக் கூறினர்.

1958-ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர், டி. பண்டாரநாயக்கா ஸ்தாபனமொன்மொன்றிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தார். 1961-ம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்கா ஆட்சியிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் 1962-ம் ஆண்டு இத்திட்டம் பற்றி ஆராயும்படி வேறொரு ஸ்தாபனத்திடம் திருமதி பண்டாரநாயக்கா கோரினர்'' என்று திரு. நடேசன் கூறினர்.

'மகாவலித் திட்டத்தை அரசாங்கம் அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளதென்று கூறமுடியாது. நிறைவேற்ற வேண்டிய நேரத்திலேயே நிறைவேற்றியுள்ளது' என்றும் திரு. நடேசன் சொன்னர்.

# நாடு முன்னேற கட்டுப்பாடு அவசியம் என்கிறர் ஜே. ஆர்.

மல்லாகம், வெள்ளி

''தேசிய இளைஞர் சேவை இயக்கத்தில் வேலை நிறுத்தம் நடைபெற முடியாது. தேசிய பாரம்பரியம், தேசிய உணர்வுகளை இந்த இயக்கம் இளைஞர் மத்தியில் ஏற்படுத்தும் மனித சமூகம் நன்கு வளர கட்டுப்பாடு குன்றுவதால் அந்நாடுகள் கீழ் நிலையடைதலை நாம் காண்கின்றோம். நமது நாட்டில் கட்டுப்பாடு நிலவியதால் நாடு முன்னேற்றமடைந்துள்ளது''

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன குருநகரில் தேசிய இளைஞர் சேவை நிறுவனத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. புள்ளைநாயகம் இவ் வைபவத்திற்கு தலைமை தங்கினர். மந்திரி மண்வெட்டி பிடித்து மண் எடுத்து இங்கு மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது: ஜேர்மனி, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் இளைஞர்கள் கட்டாயப்படுத்தபபட்டு வேலை வாங்கப்படுகின்றனர். எமது இளைஞர் சுயமரியாதை, பெருமையை நிலைநாட்ட இவ்வியக்கத்தில் சேரவேண்டும். மகாவலி கங்கையை வடக்குக்குத் திசை திருப்பலாம் என்று நாம் சொன்ன போது அதனை மாற்றுக்கட்சியினர் எள்ளிநகையாடினர். ஆனல் இத்திட்டம் இப்போது வெற்றிபெறப் போகிறது. போத்தலில் இங்கு தண்ணீர் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை.

''அரபு நாடுகளில் உப்பு நீரை அணுசக்திமூலம் நன்னீராக்குகிறார்கள் மின்சாரவசதியையும பெறுகிறார்கள். மகாவலியை இங்கு கொண்டுவருவதற்கு முன்னர் இப்படியான ஆராய்ச்சியை நடாத்தலாம்'

அரசாங்க அதிபர் தேசிய இளைஞர் சேவை கமிஷனர் திஸநாயக்கா, ஏ. அன்ரனி ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றனர். (மல்-கு.வி.ம)

## "ஈழநாடு"

### பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்ததொகை ரூபா 5,088-37 | |
| என். தாமோதரம்பிள்ளை குடும்பம் 224, ஜலான் ஈபோ, கோலாம்பூர் | 51-00 |
| நா. சம்பந்தர் அராலிமேற்கு | 11-00 |
| ரி. பாலசிங்கம் அராலி மேற்கு | 6-00 |
| எஸ். ஆர். குமரேசன் மணியகாரன்ஒழுங்கை கொக்குவில் | 50-00 |
| சி. பத்மநாதன், ஜலன்ட்கபே, கண்டிறோட், வவனியா காசோலை | 100-00 |
| யாழ்ப்பாணம் ஐக்கியவியாபாரச்சங்கம் காசோலை | 200-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கார்

EN 6000 தொடர்பைச் சேர்ந்த A50 கேம்பிறிஜ் கார் மிக நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில், கல்லூரி நேரத்தில் பார்வையிடலாம். 1925

வீடு கட்டக்கூடிய 7 பரப்புக் காணி நல்லூர் யமுனு வீதியில் விற்பனைக்கு உண்டு. கோவில், பாடசாலை மார்க்கட்டுக்கு அண்மையில் உள்ளது. பிரித்தும் கொடுக்கப்படும். பூநகரி செட்டிய குறிச்சியில் மிகத்திறமையான வயல் 60 பரப்பு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: பரஸ்கோ லூபிறிக்கேசன் சேர்வீஸ், முத்திரச்சந்தை, யாழ்ப்பாணம். 1930

வீடு;

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன் செட்டித் தெருவில் 2 பரப்பு வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் இல்லை. விபரங்களுக்கு; 37/1. செட்டித்தெரு நல்லூர். 1934

## புத்தகம்

றிப்போட்

மாணவர் தேர்ச்சி அறிக்கை விரும்பிய விதமாக அழகாக அச்சிட்டுக் கொடுக்கப்படும். விபரங்கட்கும் மாதிரிப்பிரதிகட்கும் ஆசிரியர்கள் தொடர்புகொள்க. கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 193

## கல்வி

மாணவர்களே உங்களுக்கு ஆங்கில பாடப் பரீட்சையில் சித்தியடைய விசேஷபயிற்சி வேண்டுமாஞல்கீழ்க்காணும் விலாசத்துடன் பி. ப. 4-30 மணிக்குப்பின் தொடர்பு கொள்க. 18 B அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1932

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்] ஹெலன் குமாரி, மஞ்சுளா நடித்த

மஞ்சள் குங்குமம்

ராஜா (யாழ்ப்பாணம் …

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு


## யாழ்ப்பாண மாநகர சபை

### சோலைவரி 1-ம் கந்தாயம் 1970

1970-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகர சபைஅலுவலகத்தில்செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31-3-70ம் திகதி பி. ப. 3 மணிககு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும் இவ்விதம் பணம் அனுப்பும் பொழுது, வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

1970-ம் ஆண்டு வரிமதிப்புக்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்துள்ள வரியிறுப்பாளர்கள்கூட, இந்த அறிவித்தலின் பிரகாரம்நடந்துகொள்ள வேண்டுமெனத் தயவுடன் வேண்டப்படுகின்றனர். ஆட்சேபனைகள் ஆராயப்பட்டு, வரிகுறைப்பு அளிக்கப்பட்டால், கட்டிய சோலைவரிப் பணத்தில் கூடுதலாகச் செலுத்திய பணம் மற்றைய கந்தாயங்களின் சோலைவரிப் பணத்திற்கு வரவு வைக்கப்படும்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை
ஆணையாளர்.

மாநகரசபை,
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13-3-70 2001

## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை
### ஏல விற்பனையாளர்கள், தரகர்கள் பற்றிய நிரல்
### 28-2-70 வரை

| ஏலவிற்பனையாளர் பெயர் | முகவரி | உத்தரவுச் சீட்டு இல. |
|---|---|---|
| (அ) | | |
| 1. ஆர். கனகரட்னம் | 35, கொழும்புத்துறை வீதி | 2 |
| 2. கே. ஐயாத்துரை | கோப்பாய் | 3 |
| 3. எஸ். சங்கரப்பிள்ளை | தெல்லிப்பளை | 4 |
| 4. ஏ. பி. எதிர்மானசிங்கே | 14, டேவிட் வீதி | 5 |
| 5. வி. எஸ். குட்டிப்பிள்ளை | 643, கே. கே. எஸ். றோட் | 7 |
| 6. சி. பாண்டித்துரை | மல்லாகம் | 8 |
| 7. ரி. கே. பொன்னுத்துரை | 28/1, யாழ் றோட் | 9 |
| 8. எம். நவரட்னராஜா | மண்டை தீவு | 10 |
| 9. என். தர்மலிங்கம் | 167/1, கோயில் வீதி, நல்லூர் | 11 |
| 10. ஏ. பி. பிரின்ஸ் | 107, மெயின் வீதி | 13 |
| 11. எஸ். எஸ். மாரிமுத்து | சித்தங்கேணி | 14 |
| 12 எம். முருகேசு | புங்குடுதீவு | 15 |
| 13 என். ஸ்ரீரெங்கநாதன் | பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம் | 16 |
| 14 வி. ஏரம்பமூர்த்தி | காரைநகர் | 17 |
| 15 கே. சிவாஸ்காந்தா | அராலி | 19 |
| 16 எஸ். சி. பாலசிங்கம் | அராலி வடக்கு | 20 |
| 17 என். ஆறுமுகம் | சித்தங்கேணி | 18 |
| 18 சி. விசாகரட்னம் | 132, பருத்தித்துறை வீதி | 22 |
| 19 கே. சுப்பிரமணியம் | 24, 1-ம் குறுக்குத்தெரு | 21 |
| 20 சி. தர்மலிங்கம் | உரும்பிராய் | 24 |
| 21 எஸ். சங்கரப்பிள்ளை | புத்தூர் | 23 |
| 22 வி. கோபாலபிள்ளை | 22, ஆஸ்பத்திரி வீதி | 26 |
| 23 எஸ். நரசிங்கம் | தொல்புரம் | 25 |
| 24 ஆர். எஸ் தர்மரட்னம் | யாழ்ப்பாணம் | 28 |
| 25 கே. சரவணமுத்து | 173, குருசோல்ட் வீதி | 27 |
| ஆ) தரகர் | | |
| 1 கே. கிருஷ்ணபிள்ளை | 23, ஆஸ்பத்திரி வீதி | 1 |
| (இ) ஏல விற்பனையாளர் | | |
| 1 எஸ். ரி ஏ. வடிவேலு | கே. கே. எஸ். றோட் கோண்டாவில் | 6 |
| 2 ஏ. இரத்தினசபாபதி | 4-ம் குறுக்குத் தெரு | 12 |

ஏ. ரி. சுந்தரம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 12-3-70 2000

ச. ச. நி. கரபந்தாட்டப் போட்டி

# வெற்றிக் கிண்ணத்தை உடுப்பிட்டி தட்டிக்கொண்டது

யாழ்ப்பாணம், வெள்ளி உதவி ஆணையாளர் திரு. அ. அ. யோசப்பினுல் உள்ளூராட்சி வாரத்தின்போது ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலைய கரபந்தாட்டப் போட்டி யாழ். பொலிஸ் கரபந்தாட்ட மைதானத்தில் முடிவுற்றது. இப்போட்டியில் உடுப்பிட்டி நாவலர் சனசமூகநிலையம் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது.

இறுதிப்போட்டியில் மத் …

கையாள வேண்டுமெனவும், அடுத்தபோட்டி அந்தமுறையில்தான் கையாளப்படும் என்றும் இந்தவிளையாட்டை ஊக்குவிக்க ஓர் கரப்பந்தாட்டச் சமாசமும் மத்தியஸ்த[illegible] சமாசமும் அவசியமாகு[illegible]னவும் சொன்னர்.

……

… பாடசாலையின்

சென். பற்றிக்ஸ் — யாழ்ப்பாணக்கல்லூரி

# 53-வது "பொன்விழா" கிரிக்கெட் மோதல் இன்று ஆரம்பம்

— நமது நிருபர் 'தேவா' —

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாகாணக்கல்லூரிகளிடையே நடைபெறும் கிரிகெட்போட்டிகளின் பெரும் மோதல்களின் ஒன்ருன யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிகளின் 53-வது வருடாந்த "பொன் விழா" கிரிக்கெட்மோதல் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் மிக குதூகலமாக ஆரம்பமாகின்றது.

இப்போட்டி இன்று பிற்பகல் 3-30க்கு ஆரம்பமாகின்றது. நாளை காலை இப்போட்டி மீண்டும் 8-30மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-30 மணிக்கு முடிவடையும்.

இந்த இரு கல்லூரிகளுக்குமிடையில்கடந்த 52வருடங்களாக நடைபெற்றபோட்டியில் சென். பற்றிக்ஸ் 19 தடவையும் யாழ்ப்பாணக் கல்லூரி 14 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. மிகுதி வருட ஆட்டங்கள் சரிசமனுக முடிவடைந்துள்ளன.

இவ்வருடம் இந்த இரு கல்லூரிகளின் குரிக்கெட் தரத்தை ஒப்பிட்டுப்பார்க்கும்போது சென். பற்றிக்ஸ் கோஷ்டி சற்றுப் பலங்கொண்ட கோஷ்டியாக விளங்குகின்றது. இன்று ஆரம்பமாகும் இப்போட்டியில் இரு கோஷ்டியினரின் பகுதியிலும் திறமை வாய்ந்த பந்து வீச்சு வீரர்கள் இருப்பதால், ஓட்டங்களின் எண்ணிக்கை இந்தப்போட்டியில் மிகக் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் இந்த இரு கல்லூரிகளுக்குமிடையில் சென். பற்றிக்ஸ மைதானத்தில் நடைபெற்ற போட்டியில். யாழ்ப்பாணக் கல்லூரி இன்னிங்சால் வெற்றிபெற்றிருந்தது.

### சென். பற்றிக்ஸ் கல்லூரி

இவ்வருடம் சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு எஸ் ஏ ஜோசப் காப்டனுக இருக்கின்ருர். இவர் யாழ்ப்பாணத்திலேயே மிக வேகமாகப் பந்துவீசக்கூடியவர். கடந்த மூன்று வருடங்களாக இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கும் இவர் துடுப்பெடுத்தாடுவதிலும் சிறந்தவர். சென்றவருடம் யாழ். தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சு வீரராக இருந்தவர். தமது கல்லூரியில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விந்தையும் பெற்றவர் மற்றும் ஏ. சந்திரசேகரா கே, யோகேந்திரா, எஸ் எம். இராசையா, ஏ. தர்மசீலன் ஏ, ஜே அருளானந்தம் எம். ஏ. அருள்னேஸ்வரன். எஸ். கே. சத்தியநாதன், வி. ஆர். மோகன், ஜே. எச். சி விஜயரட்னம் எம் பி. ரூபன் ஏ அநிலேஸ்வரம் ஜே ஏ புஷ்பராசா டபிள்யூ அன்ரன் எஸ். ஆர் ஜோசப் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

### யாழ்ப்பாணக்கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஜே எஸ் போல் காப்டனுக இருக்கின்ருர். இவரும் ஓர் சிறந்த பந்துவீச்சு வீரர். இக் கோஷ்டியில் கடந்த நான்கு வருடங்களாக அங்கம் வகிக்கும் இவருக்கு சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற பரிசும் இவருடைய கல்லூரியினுல் வழங்கப்பட்டுள்ளது. துடுப்பெடுத்தாடுவதிலும் கெட்டிக்காரர். மற்றும் சி. சண்முகம் சி. நடேசன் ஏ நிமலநேசன் ஆர். சி. காப்பென்ரர் ரி. ஜெயபாலன் எஸ். தேவராசா, இ. தங்கவடிவேல், பி. ரோணி ஏ. எமர்சன் கணேசலிங்கம் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

கோப்பாய் வட்டார

# மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

உரும்பராய், வியா. கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளினதும் கனிஷ்ட பிரிவுகளினதும் மெய்வல்லுநர்ப் போட்டி அண்மையில் நீர்வேலிஅத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இவ்வருடத்துக்கான 'நடேசலிங்கம்' சாம்பியன் கிண்ணத்தை சமபுள்ளிகளைப்பெற்ற உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையும், உரும்பராய்சந்திரோதயவித்தியாசாலையும் கூட்டாகப் பெற்றுக்கொண்டன. மூன்ருவது இடத்தையும் உரும்பராய் றோமன் கத்தோலிக்க பாடசாலையே பெற்றுக்கொண்டது.

கோப்பாய் தொகுதியில் உள்ள 34 பாடசாலைகளில் இருந்து 500க்கு அதிகமான மாணவர்கள் பங்குபற்றிய இப் போட்டிக்கான பரிசில்களை மாவட்டக் [illegible] ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு வழங்கினுர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. சண்முகநாதன் இப்போட்டிக்கு தலைமை தாங்கினுர்.

உயரம்பாய்தல்: ரா. லெனின் ருெபின்சன் உரும் றோ க பாட, கு. மனேகரன் உரும் றோ க பாடசாலை, வ இரத்தினசிங்கம் ஆவரங்கால் மெ. மி. பாடசாலை,

4X50 மீற்றர் அஞ்சல்; உரும்பராய் றோ. க. பாடசாலை ஆவரங்கால் மெ மி பாடசாலை, உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை

4X100 மீற்றர் அஞ்சல்: உரும்பராய் றோ க பாடசாலை, சைவத்தமிழ்வித்தியாசாலை, சந்திரோதய வித்தியாசாலை.

### 13 வயது பெண்கள்

75 மீற்றர் ஓட்டம்: எஸ். ஜெகதீஸ்வரி அச்சுவேலி புனித தெரேசா பாடசாலை, ஆ. சியாமளாரூபி உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை. ரி. சந்திராவதி அச்சுவேலி புனிததெரேசா பாடசாலை.

100 மீற். ஓட்டம்: ஆ. சியாமளாரூபி உரும்பராய் சைவத்தமிழ். ரி. சந்திரா …

# வதிரி வின்னேஸ் வெற்றி

புத்தூர், வியாழன் புத்தூர் வீனஸ் கழகம் நடத்தும் கவிஞர் மு செல் …

யாழ். கல்லூரிகள்

# கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி கடந்தவாரம்நடைபெற்ற யாழ்ப்பாணம்கல்லூரிகளின் கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### ஸ்கந்தா வெற்றி

யாழ் மத்திய கல்லூரிக்கும், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில், நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், யாழ் மத்திய கல்லூரி தோல்வியடைந்தது. இப்போட்டியில் ஸ்கந்தா கல் கல்லூரி ஐந்து அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

### சமமான முடிவு

யாழ். இந்துக் கல்லூரிக்கும், ஹாட்லி கல்லூரிக்குமிடையில்நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

— —

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 20—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற் சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதம். 8-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை. 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 நாளைய சந்ததி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் குங்குமம்

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-ஏ-வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த

# பந்தயம்

பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி


1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





# சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

கரபந்தாட்ட மைதானத்தில் முடிவுற்றது. இப்போட்டியில் உடுப்பிட்டி நாவலர் சனசமூகநிலையம் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது.

இறுதிப்போட்டியில் மத்யஸ்தம் வகித்த திரு. எடி. வர்ணகுலசிங்கி பேசுகையில் "செற்-அப்" விளையாட்டுமுறையை யாவரும்

## இணுவில் இந்து வெற்றி

உடுப்பிட்டி, வியாழன் இணுவில் இந்து விளையாட்டுக் கழக முதற்பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், கொக்குவில் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் இணுவில் எச்சாட்டி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. பொ. கனகசபாபதி மத்தியஸ்தம் வகித்தார்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிற்போயா, போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
நான்
(ஈஸ்ட்மென்கலர்)

ஸ்ரீ காலிங்கன
இணுவில்
தினசரி 6-30 9-30
பிற்போயா, போயா 2-30
சுந்தர பிறிந்த
(சிங்களம்)

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
மகராசி
4-00p.m. only
PARIS CHAMPAGNE

MANOHARA
JAFFNA
Daily 4-45 7 & 9-45 p.m
Elizabeth Taylor
Marlon Brando
in
Reflection in a
Golden Eye
[Techni Color]

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 q m.
Kirk Douglas,
Robert Mitchum
in
THE WAY WEST
[color]

யஸ்த ... சமாசமும் அவசிய மாகுமெனவும் சொன்னார்.

......

## அனலைதீவு பாடசாலையின் வெற்றி

அனலைதீவு, வியாழன் சமீபத்தில் நடைபெற்ற ஊர்காவற்றுறை வட்டார விளையாட்டுப் போட்டியில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவ மாணவிகள் பல விளையாட்டுக்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கீழ்ப் பிரிவு, பெண்கள் பிரிவுக்கான வெற்றிக் கிண்ணத்தையும், பெண்கள் பிரிவில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றமைக்குரிய வெற்றிக் கிண்ணத்தையும் மேற்படி வித்தியாலய மாணவிகள் தட்டிக்கொண்டனர்.

## உதைபந்தாட்டம்

ஊர்காவற்றுறை, வியா. பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகக் கடமையாற்றிய குரவர் வண. கே பி. சந்தியாப்பிள்ளை கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியை நடாத்துவதற்கு புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் தீர்மானித்துள்ளது.

அடுத்தமாத முற்பகுதியில் உதைபந்தாட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## பிரசாரக் குழு

யாழ்ப்பாணம், வெள்ளி சர்வோதய அரசியல் முன்னணியின் பிரசாரக்குழு நேற்று மாலை வேலணையில் உள்ள சர்வோதய அரசியல் முன்னணியின் செயலகத்தில் தலைவர் திரு. சி. நகுலேசபிள்ளை தலைமையில் கூடியது வேலணை. நாரந்தனை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இயக்கத்தின் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு ஒரு பிரசாரக் குழு அமைக்கப்பட்டது. பிரசாரக்குழுத் தலைவர்: திரு. சி நகுலேசபிள்ளை, காரியதரிசி: ஆ மாணிக்கராசா. பொருளாளர்: ச. முருகேசு செயற்குழு: த கோபாலபிள்ளை, கு மத்தியாஸ், கவிஞர் ஜி எம் செல்வராசா, ப கந்தசாமி, சி வேலுப்பிள்ளை, ஜே ஜோன்பிள்ளை,

பொதுத்தேர்தலில் தீவுப் பகுதியில் போட்டியிடும் வழக்கறிஞர் திரு ப கதிரவேலு, 'சத்தியம்' பத்திரிகை ஆசிரியரும், சர்வோதய அரசியல் முன்னணிச் செயலாளருமான மு. பொன்னம்பலம் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கல்வி மாவட்டக் ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு வழங்கினர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் இப் போட்டிக்கு தலைமை தாங்கினர்.

போட்டிமுடிவுகள் வருமாறு:

### 11 வயது ஆண்கள்

50 மீற்றர் ஓட்டம்: ... குணரத்தினம் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை செ. சிவராசா உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, அ. யோகராசா வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாசாலை,

75 மீற்றர் ஓட்டம்: செ. குணரத்தினம் உரும். சந்திரோதய வித்தியாசாலை, செ. சிவராசா உரும். சைவ தமிழ்வித்தியாசாலை, செ. வரகுராசா வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாசாலை.

4X50 மீற்றர் அஞ்சல்: உரும். றோமன்கத்தோலிக்க பாடசாலை, ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, உரும். சந்திரோதய வித்தியாசாலை.

நின்றுபாயும் அஞ்சல்: உரும். றோ. க. பாடசாலை, உரும். சைவத்தமிழ் வித்தியாசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

### 11 வயது பெண்கள்:

50 மீற்றர் ஓட்டம் க. குமுதினி உரும். சந்திரோதயவித்தியாசாலை, இ. மாலா நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, இ விமலேஸ்வரி ஸ்ரேசன் பாடசாலை அச்சுவேலி.

4X50 மீற்றர் அஞ்சல்; உரும். சந்திரோதயவித்தியாசாலை, அச்சுவேலி புனித தெரேசா பாடசாலை. உரும். றோ. க. பாடசாலை

நின்றுபாயும் அஞ்சல்: உரும். சந்திரோதயவித்தியாசாலை, உரும். சைவத்தமிழ் வித்தியாசாலை, அச்செழு மெ. மி. பாடசாலை.

### 13 வயது ஆண்கள்

கீழ்ப்பிரிவு:

75 மீற்றர்: செ- செல்வஞானம் அச்செழு மெ. மி. பாடசாலை, செ. சந்திரகுமார் உரும். ச. வித்தியாசாலை, அ. குலேந்திரராசா உரும். சை. வித்தியாசாலை.

100 மீற்றர் ஓட்டம்: செ. செல்வஞானம் அச்செழு மெ. மி. பாடசாலை, இ காளிதாசன், உரும். சை, வித், அ குலேந்திரராசா உரும். சை வித்தியாசாலை.

நீளம்பாய்தல்: ரா. லெனின் றொபின்சன் உரும். றோ. க. பாட, க. பாலச்சந்திரன், உரும். சை வித், சி. குணராசா ஆவரங்கால் மெ மி பாடசாலை.

... உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை. ரி. சந்திராவதி அச்சுவேலி புனிததெரேசா பாடசாலை.

100 மீற். ஓட்டம்: ஆ. சியாமளாரூபி உரும்பராய் சைவத்தமிழ். ரி. சந்திராவதி அச்சுவேலி புனித தெரேசா. க. இராசேஸ்வரி கோப்பாய் சரவணபவானந்தா.

4X50 மீற். அஞ்சல்: உரும்பராய் சந்திரோதயவித்தியாசாலை, அச்சுவேலி புனித தெரேசா, உரும்பராய் சைவத்தமிழ்.

4X1000 மீற் அஞ்சல்: உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை சந்திரோதய வித்தியாசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

100 மீற் ஓட்டம்: வ. மார்க்கண்டு அச்சுவேலி ஸ்ரீவிபஸி வித்தியாசாலை, நா. சின்னத்தம்பி அச்சுவேலி ஸ்ரீவிபஸி வித்தியாசாலை, ஞா. ஞானப்பிரகாசப் உரும்பராய் றோ க வித்தியாசாலை,

200மீற் ஓட்டம் வ மார்க்கண்டு ஸ்ரீவிபஸி வித்தியாலயம், வ சொக்கநாதன் வசாவிளான் றோ க பாடசாலை. க. பியதாச ஸ்ரீவிபஸி வித்தியாலயம்.

400 மீற் ஓட்டம்: க பியதாச அச்சுவேலி ஸ்ரீவிபஸி வித்தியாலயம், வ சொக்கநாதன் வசாவிளான் றோ க பாடசாலை, பி யாகப்பர் உரும்பிராய் றோ க பாடசாலை.

800 மீற் ஓட்டம்: பியதாசப்பர் உரும்பராய் றோ க. பாடசாலை.

1500 மீற் ஓட்டம்: கு கனகலிங்கம் அச்சுவேலி ஸ்ரீவிபஸி வித்தியாலயம்

நீளம் பாய்தல்: ரி தம்பித்துரை அச்செழு மெ மி. பாடசாலை.

உயரம்பாய்தல்: அ சின்னத்துரை அச்சுவேலி ஸ்ரீவிபசி வித்தியாலயம்.

குண்டெறிதல்: இ. துரைசிங்கம் வசாவிளான் றோ க பாடசாலை, சா. சிங்கராசா உரும்பராய் சந்திரோதயம், கு கனகலிங்கம் அச்சுவேலி ஸ்ரீ விபஸிவித்தியாலயம்.

முப்பாய்ச்சல்: அ சின்னத்துரை அச்சுவேலி ஸ்ரீவிபஸி வித்தியாலயம்,

பரிதிவட்டம் வீசுதல்: இ. துரைசிங்கம் வசாவிளான் றோ. க. பாடசாலை. ச. சிங்கராசா உரும்பராய் சந்திரோதயம், பி. அந்தோனிப்பிள்ளை உரும்பராய் றோ. க.

தடியூன்றிப்பாய்தல்: வ மார்க்கண்டு, நா. சின்னத்தம்பி இருவரும்தெரிவுசெய்யப்பட்டனர்.

4x100 மீற்றர் அஞ்சல்: அச்சுவேலி ஸ்ரீ விபஸி வித்தியாலயம்.

4x200 மீற்றர் அஞ்சல்: அச்சுவேலி ஸ்ரீ விபஸி வித்தியாலயம்.

## வதிரி வின்னேஸ் வெற்றி

புத்தூர், வியாழன் புத்தூர் வீனஸ் கழகம் நடத்தும் கவிஞர் மு செல்லையாவின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி வின்னேஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ட் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் வதிரி வின்னேஸ் 3—2 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி புத்தூர் கலட்டி வீனஸ் திடலில் நடைபெற்றது.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம் 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 ஐ நா சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 7-ம் திகதி [20-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். சிலர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்திற்கும் நாள் நிச்சயிக்கப்படலாம். தந்தை வழி மூலம் ஆதரவு பெருகும் செல்வாக்கு வளர்ச்சியடையும்.

**ரிஷபம்-** தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். புண்ணிய ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம். தெய்வத்தின் துணையுண்டு.

**மிதுனம்-** இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இலாபகரமான தினம். வாகன சொந்தக்காரர்கள் அதிக பயனடைவர் ஆசிரியத் தொழிலில் இருப்போருக்கும் செல்வாக்கு வளர்வதற்கு இடமுண்டு.

**கடகம்-** பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளை தவிர்க்கவும். தொழில்புரியுமிடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

**சிம்மம்-** இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும். உதவிசெய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக்கொள்ள நேரிடும்.

**கன்னி-** வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சில புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல் நலம் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்

**துலாம்-** அன்னியர் வாழ்க்கையில் குறுக்கிடுவார்கள் தனி வழிப்பயணம் ஆபத்தைத் தரக்கூடும். இன்று கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

**விருட்சிகம்-** நன்மையான திருப்பங்கள் காணப்படுகின்றன திறமையின் மூலம் புதிய தொழிலுக்கான வாய்ப்புக்கிடைக்கக்கூடும். தாய்வழி மூலம் பொருள் வரவுக்கும் இடமுண்டு திருப்திகரமான தினம்

**தனுசு-** காரியங்கள் அனைத்திலும் கை கொடுப்பதற்கு வீட்டிலுள்ள அனைவரும் முன்வருவார்கள். இதயத்தில் இன்பத்தின் ரேகைகள் படரும் தெய்வவழிபாட்டில் அதிக நாட்டம் செலுத்துவீர்கள்.

**மகரம்-** மிகவும் நிதானத்துடன் காரியங்களில் ஈடுபடவேண்டும், எச்சந்தர்ப்பத்திலும் அவசரப்போக்கைத் தவிர்த்துக்கொள்ளவும், நீண்ட பிரயாணத்தை இன்று தள்ளிப்போடுவது விரும்பத்தக்கது

**கும்பம்-** ஆனந்தமயமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், கணவன் மனைவி உறவு முறைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும். சிலருக்குத் திடீர் திருமணமும் நடைபெறலாம்.

**மீனம்-** அன்னியர் சவகாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், சிறிய விஷயத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள். உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும். அடக்கம்வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி நீக்கப்பட்ட கம்போடிய அதிபர்

# வெளிநாட்டில் இருந்துகொண்டே புதிய அரசொன்றை அமைப்பாராம்

## பீகிங் செல்லுமுன் மாஸ்கோவில் நொரடோம் சிகானுக் அறிவிப்பு

மாஸ்கோ, மார்ச். 19

பதவியிலிருந்து விலக்கப்பட்டகம்போடியாஅதிபர்இளவரசர்நொரடோம் சிஹானுக் தாம் வெளிநாட்டில் இருந்தபடியே புதிய அரசு ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

கம்போடியா அதிபர் இளவரசர் சிஹானுக் மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருந்த சமயத்தில் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

இளவரசர் சிஹானுக்கின் கம்யூனிஸ சார்புகொள்கைகளை எதிர்ப்பவர்கள் அவரைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பதாகக்கூறப்படுகின்றது.

இளவரசர் நரடோம் சிஹானுக் மாஸ்கோவிலிருந்தபொழுது கம்போடிய ஆட்சி மன்றம் கூடி அவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றியது. நாட்டின் தலைமைப் பதவிக்கு தற்காலிகமாக ஆட்சிமன்ற சபாநாயகர் திரு. ஷென்லாய் என்பவரை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கம்போடியாவில் வெளிநாட்டுத் துருப்புகள் இருந்து வருவதை ஆட்சேபித்து கடந்த சிலவாரங்களாக கம்போடிய தலைநகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. நாம்பென்னில் இருக்கும் வட வியட்னாம், வியட்காங் தூதர்கள்மீதும் தாககுதல்கள் நடைபெற்றன அந்த சமயத்தில் அதிபர் நொரடோம் சிஹானுக் வெளிநாடுகளில் இருந்தார். இப்பொழுது. அவர் வெளிநாட்டில் இருக்கும் அதே சமயத்தில் அவர் பதவியிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளார்.

முடிமன்னராய் இருக்க வேண்டிய இளவரசர் சிஹானுக் நாட்டில் ஜனநாயகம் தழைக்கவேண்டும் என்பதற்காக முடியைத் துறந்து விட்டு தேர்தலில் நின்று அதிபர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அவர். தோற்றுவித்த ஜனநாயக அமைப்பில் அவருக்கு இடமே இல்லையென்ற அளவுக்கு அந்த நாட்டில் இப்பொழுது காரியங்கள் நடைபெற்றுள்ளன.

இளவரசர் சிஹானுக் நேற்று மாஸ்கோவிலிருந்து பீகிங் புறப்பட்டுச் சென்றார். அவரை ரஷ்யத் தலைவர்கள் வழியனுப்பிவைத்தனர்.

திரு. சிஹானுக் பதவியிலிருந்து விலக்கப்பட்டது சம்பந்தமாக சோவியத் தலைவர்களோ, சீனத் தலைவர்களோ இன்னும் அபிப்பிராயம் எதுவும் வெளியிடவில்லை, வடவியட்னாமும் கருத்து எதுவும் வெளியிடவில்லை

## தீவுப்பகுதியில் 32,011 வாக்காளர் 4 பேர் போட்டி

ஊரதீவு, வியா

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முப்பத்திரண்டு ஆயிரத்து பதினொரு வாக்காளர்கள் தீவுப்பகுதி தொகுதியில் வாக்களிப்பதற்குத் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள். இத்தொகுதியில் முப்பத்தைந்து வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் வாக்களிப்பர்.

தீவுப்பகுதி தொகுதியில் கூடுதலான வாக்காளர்கள் புங்குடுதீவு கிராமசபைப் பகுதியில் பதிவாகி இருக்கிறார்கள், ஏழாயிரத்து அறு நூற்று தொண்ணூற்றேழு வாக்காளர் இங்கு உள்ளனர். ஆறுயிரத்து நானூற்று எழுபத்தாறு வாக்காளர்களைக் கொண்ட நாரந்தனை கிராமசபைப் பகுதி இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

தீவுப்பகுதியில் வாக்காளர் குறைந்த பகுதி எழுவைதீவுக் கிராமசபைப் பகுதியாகும். இங்குள்ள வாக்காளர் தொகை இருநூற்றைம்பத்திரண்டு.

இத்தொகுதியில் வருகிற பொதுத் தேர்தலில் நாலு அபேட்சகர்கள் போட்டியிடவிருப்பதாக கூறிக் கொள்ளப்படுகிறது.

## "சிங்களப் பரீட்சையை இலகுவாக்கவும்

### தமிழ் அரசாங்க ஊழியர் மகஜர்!

வெள்ளவத்தை, வியா.

"அரசாங்க ஊழியர்களுக்கான சிங்கள மொழிப் பரீட்சையை வர வர மிகவும் கடினமாக்கிவிட்டார்கள். சிங்கள மாணவர்கள் பரீட்சை எடுத்தால் கூடச் சித்தியடைய முடியாத அளவிற்குக் கேள்விகளைக்கடுமையாக்கி விடுகிறார்கள். இப்படியான நிலைமையில் தமிழ் மாத்திரம் தாய்மொழியாகக் கொண்ட அரசாங்க ஊழியர்கள் எப்படிப் பதில் எழுதமுடியும்? இயன்றவரை பரீட்சையை இலகுவாக்கி எமக்கு வாழ்வளியுங்கள்" இவ்வாறு கேட்கும் மகஜரொன்றைத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிலர் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளனர். தற்போதைய வினாத்தாள்களைப் பற்றி இவர்கள் மிகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

## ஜோதிபாசு முதல்வராகும் சாத்தியம் இல்லை?

### பெரும்பான்மை ஆதரவை நிரூபிப்பதில் கஷ்டம்

புதுடில்லி, மார்ச். 19

மந்திரிசபை அமைப்பதற்கான பெரும்பான்மைப்பலம் இருக்கிறதென்பதை நிரூபிக்கும்படி கவர்னர் விடுத்த கோரிக்கையை மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சியினர் நிராகரித்து விட்டனர்.

நேற்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ஜோதிபாசு மேற்கு வங்காள கவர்னரைச்சந்தித்துப் பேசினார். மந்திரிசபை அமைப்பதற்கான பெரும்பான்மைப் பலம் இருக்கிறதென்பதை நிருபிக்க தமக்கு ஆதரவானவர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிக்கும்படி கவர்னர் கேட்டிருந்தார்.

ஆனால் இதுபற்றி கலத்தாலோசனை செய்த மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடம் கவர்னரின் கோரிக்கைகை நிராகரிப்பதென்று முடிவு செய்தது. மார்க்ஸீய கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான கட்சிகள் சமர்ப்பித்துள்ளபெயர்ப்பட்டியல்களின் படி மார்க்ஸிஸ்டுகளுக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லாதிருப்பதாலேயே கவர்னர் இவ்வாறு கேட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கவர்னரின் நிலையைமார்க்ஸிட்யவாதிகள் குறைகூறியிருக்கிறார்கள்,

பெரும்பான்மை ஆதரவு குடுப்பதாக மார்க்ஸிட்டுகள் நிருபிக்காவிடில் திரு. ஜோதிபாசுவை ஆட்சி அமைக்கும்படி கேட்பது சாத்தியமில்லையென கவர்னர் கூறியிருப்பதாகத்தெரிகின்றது.

மார்க்ஸிட்கள் ஆட்சி அமைப்பதற்கு அழைக்கப்படாவிடில் மாற்று அரசு அமைப்பதுபற்றி 9 கட்சிகள் நேற்று தங்களுக்குள் ஆலோசனைகள் நடத்தின.

மேற்குவங்க முதல்வர்திரு அஜாய்முகர்ஜி ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட கலவரங்களில்இதுவரை 32 பேர் பலியாகியிருப்பதாக அறியப்படுகின்றது.

## "மகாவலி வடக்கு வந்தேதீரும்"

### உபசபாநாயகர் உறுதி கூறுகிறார்

உடுப்பிட்டி,வியா.

"இலங்கை முழுவதும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்றே தமிழ்க் காங்கிரஸ் கேட்டது. எம்மிடையேஒற்றுமையின்மையால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழையும் பாவிக்கலாம் என்ற சலுகையைத்தவிர வேறு ஒன்றையும் பெறமுடியவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களமே ஆட்சிமொழியாகக் கருதப்படுகிறது."

இவ்வாறு ஆட்சி மன்ற உபசபாநாயகரும, உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியில் 5வது கிராம நலசேவாசங்கத்தை காணவாய்...

பெறப் பாடுபடுகிறார்கள் ஒருமுறை ஒரு பிரச்னையை விட்டுக் கொடுத்துவிட்டால் பின்னர் அப்பிரச்னையைக் கிளப்புவதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. உயர் தரக் கல்வி தொடர்ந்து கிடைக்கவேண்டும் என்பதற்காகத் தமிழருக்கென ஒரு பல்கலைக்கழகம் கொடுக்கமுடியாது' இருமொழிப் பல்லைக்கழகம்தான் கொடுப்போம்என்று பிரதமர்டட்லி கூறியதைத் தமிழரசுக் கட்சியினர் ஏற்றுக் கொண்டனர். இதனை எவரும் மறுக்க முடியாது.

பல்கலைக்கழகம் எந்த மொழியில் என்பதல்லப் பிரச்னை. எங்குநிறுவ வேண்டும் என்பது இன்றைய பிரச்னை. யாழ்ப்பாணத்தில் ...

வேண்டும்.

மகாவலிகங்கையைவடக்கே திருப்பினால் தமிழ்ப்பகுதிகள் செழிப்புற்று விடும். தமிழ்மக்கள் முன்னேறிவிடுவார்கள் என்ற காரணத்தால் இத்திட்டத்தை எதிர்க்கட்சியினர் எதிர்க்கின்றனர் அனுராதபுரம் புவியியல் அமைப்புப்படி அனுராதபுரம் மட்டும்தான் மகாவலி கங்கைவரும் என்றுசிலர் கூறிவருகின்றனர். அனுராதபுரம் புவியியல் அமைப்புப்படி அனுராதபுரத்திலேயே மகாவலிநின்று விட்டால் அந்நகரம் வெள்ளத்தில் மூழ்கிவிடும் என்று புவியியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர்,

ஆதலால் கட்டாயம் மகாவலி யாழ்ப்பாணம் வந்தே தீரும் ...

## ரொடீஷியாவைக் கண்டிக்கும் புதிய தீர்மானம்

### பாதுகாப்பு சபையில் நிறைவேறியது

நியுயோர்க், மார்ச் 19 தாக்கல் செய்தது. 14 நாடு ...

## மலையேறும் பிரி. கோஷ்டி

லண்டன், மார்ச்19

இமாலய மலைத் தொடரிலுள்ள அன்னபூர்ண எனப்படும் சிகரத்தில ஏறி புதிய சாதனையை நிலைநாட்டப் போகிறது ஒரு பிரிட்டிஷ் ...

## அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு டாக்டர் நியமனம்

### நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி ... திறந்துவைப்பார்.

அனலைதீவில் புதிதாக ... வடபகுதி ... அழைக்கப்பட்டு நாளை திறக்கவிருக்கும் ஆஸ்பத் ... திய அத்தியட்சகர் தீவுப் பகுதி எம். பி. திரு. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு சபையில் நிறைவேறியது

நியுயோர்க், மார்ச் 19
ரொடீஷியா சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்புச்சபை எல்லாத் தரப்பினருக்கும் உடன்பாடான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

பிரிட்டன் சமர்ப்பித்திருந்த தீர்மானம் ஒன்றும் ஆசிய-ஆபிரிக்க நாடுகள் தாக்கல் செய்திருந்த தீர்மானம் ஒன்றும் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு விட்டன.

இதன்பேரில் இந்தப் புதிய தீர்மானத்தைப் பின்லாந்து தாக்கல் செய்தது. 14 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. ஸ்பெயின் மட்டும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

பின்லாந்து தாக்கல்செய்துள்ள தீர்மானம், ரொடீஷியா தன்னிச்சையாக குடியரசுப் பிரகடனம் செய்து கொண்டிருப்பதைக் கண்டிப்பதோடு ரொடீஷியாவுடனுள்ள சகல தொடர்புகளையும் அறுத்துக்கொள்ளும்படி அங்கத்துவ நாடுகளைக் கேட்டிருக்கின்றது.

## இந்தியாவில் குடியேறும்படி பழநிமலைக்கு அழைப்பு

கைதடி, வியா
கைதடிப் பழநிமலைக்கு இந்தியாவில் வந்து குடியேறும்படி அழைப்புக் கிடைத்திருக்கிறது. இந்த அழைப்பில் 25 பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

நவயுகபால நந்தீஸ்வர தவில்வித்துவான் திரு கே. பழநிமலை அண்மையில் தமிழ்நாடுசென்று தனதுகலைத்திறனால் பலரின் பாராட்டைப் பெற்று, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது அறிந்ததே. அவர் இலங்கை திரும்பி சுமார் மூன்று மாதங்கள் ஆகின்றன. திரு பழநிமலையை இந்தியா வந்துகுடியேறுமாறு அழைத்துள்ள 25 பேரும் அங்குள்ள தவில் வித்துவான்களாவர்.

இந்துசமயபாடத்திட்டமாற்றம்

## நடவடிக்கை எடுக்கும்படி எம். பிக்களிடம் கோரிக்கை

கோப்பாய், வியாழன்
க. பொ. த. உயதர வகுப்பிற்கான இந்து சமய பாடத் திட்டத்தை, கல்வி இலாகா மாற்றியமைப்பதென்ற தீர்மானத்தை ஆட்சேபித்து, இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் வடபகுதித் தமிழ் எம். பி.க்களைக் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

புதிய பாடத் திட்டத்தில் 'நவீன இந்து மதம்' என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது நமது சமயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு ஏதுவானது எனவும் அது சுட்டிக்காட்டுகிறது

### நெசவு மண்பாட்டப் பரீட்சை

பருத்தித்துறை, வியாழன்
இம்மாதம் 9-ம் திகதி தொடக்கம், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நெசவு, மட்பாண்டச் செய்முறைப் பரீட்சை நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் கன்னியர் மடத்திலும், வவனியா தமிழ் மகாவித்தியாலயத்திலும்இம்மாதம் 25-ம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கும் இதே பரீட்சையில் சுமார் 575 மாணவர் பங்குபற்றவிருப்பதாகத் தெரிகிறது. இவற்றிக்கான சகல ஒழுங்குகளையும் வடபகுதி கலை, கைப்பணி வித்தியாதிபதி திரு. மு கனகசபை மேற்கொண்டுள்ளார்.

### 2850கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டன

கோட்டை, வியாழன்
ஆறுலட்சம் ரூபா பெறுமதியானகைக் கடிகாரங்கள் கொழும்பு துறைமுகத்தில் கப்பல் ஒன்றிலிருந்து சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆறுலட்சம் பெறுமதியான 2850 கடிகாரங்களும் கப்பலின் அறையொன்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பியர் போத்தல்களினிடையில் வைக்கப்பட்டிருந்தனவாம்.

லண்டன், மார்ச்19
இமாலய மலைத் தொடரிலுள்ள அன்னபூர்ண எனப்படும் சிகரத்தில ஏறி புதிய சாதனையை நிலைநாட்டப் போகிறது ஒரு பிரிட்டிஷ் கோஷ்டி. இந்த மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் சிலர் நேற்று லண்டனிலிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்டனர். நாளையதினம் இவர்கள் காட்மண்டு சென்றடைவார்கள். அடுத்த சிலதினங்களில் இவர்கள் அன்னபூர்ண மலையை நோக்கிப் புறபபடுவார்கள்.

இந்த மலையேறும் கோஷ்டியின் தலைவரான கிறிஸ் பெனிங்டன் ஏற்கனவே நேபாளம் வந்துள்ளார். மொத்தம் 11 வீரர்கள் இந்த முயற்சியில் பங்கு கொள்வார்கள். பிரிட்டனிலுள்ள எவரஸ்ட் மலை நிறுவனம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

### மிக முக்கிய கிராமம் வீழ்ச்சி

பென்டியான், மார்ச் 19
லாவோஸில் மிக முக்கிய கிராமமொன்றை வடவியட்னாம் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

### இஸ்ரேலுக்கு யு. எஸ். ஜெட்கள்

நியூயோர்க், மார்ச் 19
இஸ்ரேலுக்கு ஜெட் விமானங்கள் வழங்குவதுபற்றி முடிவெடுப்பதை அமெரிக்கா மீண்டும் பின்போட்டிருக்கின்றது. இந்த வாரத்தின் இறுதியில் இதுபற்றி தமது முடிவை அதிபர் நிக்ஸன் அறிவிப்பார் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

### பிரதமர் திறந்து வைத்தார்

காலி, வியாழன்
அமரசூரியா பெண்கள் பயிற்சிக் கல்லூரியைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா காலியில்திறந்துவைத்தார். அமரசூரியா குடும்பத்தினர் இந்த நிலையத்தைக் கல்வி இலாகாவுக்கு அன்பளித்துள்ளனர்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயக்கா திரு. எச். டபிள்யு. அமரசூரியா உட்பட மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

### நாளை திறப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி
அனலைதீவில் புதிதாக அமைக்கப்பட்டு நாளை திறக்கப்படவிருக்கும் ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரி ஒருவர் நாளைமுதல் நியமிக்கப்படவுள்ளார். அனுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஏ. சண்முகநாதன் நாளை 21-ம் திகதி முதல் அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் புதிதாகத் திறக்கப்படவிருக்கும் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக வைத்திய அதிகாரியை நியமிக்கும்படியும், இப்பகுதி மக்கள் தகுதிவாய்ந்த டாக்டர் இல்லாததினால் மிகவும் கஷ்டப்படுவதாகவும், நேற்று முன்தினம் சுகாதார அமைச்சு நிரந்தரக்காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கத்துக்கு அவரச தந்தி மூலம் அறிவித்திருந்தார். நேற்றுக்காலை நிரந்தரக்காரியதரிசி தீவுப்பகுதி எம் பி யுடன் டெலிபோனில் தொடர்புகொண்டு அனுராதபுரத்தில் கடமையாற்றும் அனலதீவைச் சேர்ந்த டாக்டர் சண்முகநாதன் என்பவரை 21-ம் திகதி முதல் அனலைதீவுக்கு தந்திமூலம் திடீர் இடமாற்றம் செய்துள்ளதாகக் கூறினார். இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்படுவது இதுவே முதல் தடமையாகும்.

நாளைக்காலை சுகாரஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு ஸி. பாலசிங்கம் வார்ட்டுக்கள் அடங்கிய ஆஸ்பத்திரியைத் திறந்துவைப்பார். இவருடன் வடபகுதி வைத்திய அத்தியட்சகர் தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் ஆகியோரும் அனலைதீவுக்குச் செல்வர்.

### ஏழாலை முன்னேற்றச் சங்கத்தின் முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி
ஏழாலைதெற்கு ஸ்ரீமுருகன் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் அக்கிராமத்திலுள்ள ஒரு வீதியை சிரமதான மூலம் செப்பனிட்டனர். இதன்மூலம் பல ஆயிரம் ரூபாவை மீதப்படுத்தியதுடன் பலவருடகாலமாக நிலவிவந்த வீதியில்லாக் குறைபாட்டையும் நிவர்த்தி செய்துள்ளனர்.

ஏழாலை தெற்கு ஞான வைரவர் கோவில் முன்பாக செல்லும் மூத்ததம்பி வீதியை ஏழாலைதெற்கு ஸ்ரீமுருகன் கிராம முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த நாற்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் திரு மு வைரவநாதன் தலைமையில் செய்து முடித்தனர். இப்பகுதியைச் சேர்ந்த லொறிச்சொந்தக்காரர்களும் இதில் ஒத்துழைத்தனர்.

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி
பருத்தித்துறை புலோலி மேற்கு ஆலடிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் வருகிற திங்கட்கிழமை தொடக்கம் யாகபூஜையுடன் ஆரம்பமாகி புதன்கிழமை மிகச்சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி சீதாராம சாஸ்திரிகளின் வேதபாராயணத்துடன் நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தன்று இந்திய சிற்பாசாரியர்களைக் கொண்டு செய்யப்பட்ட நாகதம்பிரான். சண்டேஸ்வரர், நவக்கிரகம் போன்ற விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படும். அன்றிரவு சுவாமி வீதிவலம்வரும் காட்சியும் இடம்பெறும். மறுநாள் கந்தபுராண படிப்பு ஆரம்பமாகும்.

### திட்டங்களை விசாலிக்க அமெரிக்கா பயணம்

கோட்டை, வியாழன்
சர்வதேச பெற்றோலியக் கம்பெனிகளுடன் தொடர்புகொண்டு தனது அபிவிருத்தித் திட்டங்களை விசாலிப்பதற்கு இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இதற்காக நேற்று முன்தினம் பெற்றோலியம் கூட்டுஸ்தாபன அதிபர் திரு ஏ எம் என் பெரேராவும் தொழில் நுட்ப மனேஜர் டி டி குலவீரவும் அமெரிக்கா பயணமாகியுள்ளனர்.

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி
வியாபாரிமூலை ஐக்கியபண்டகசாலையின் வருடாந்த மகாசபைக் கூட்டம் திரு. த. ப. தம்பையாபிள்ளை தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; ஆர் சபாரத்தினம், உபதலைவர்: சி மகாதேவன்பிள்ளை, காரியதரிசி; என் சிவபாதசுந்தரம், உபகாரியதரிசி: எஸ் சிவராசசிங்கம், தனாதிகாரி எஸ தம்பித்துரை, கணக்குப்பரிசோதகர்கள்: எஸ் வாசுதேவன், க ஸ்கந்தசோதி. 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

இவ்வாறு ஆட்சி மன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியில் 5வது கிராம நலசேவாசங்கத்தை கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் கோவிலடியில் அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

",மொழி அந்தஸதை இன்று பெறுவிட்டாலும் நாம் ஐக்கியப்பட்டால் 10 ஆண்டுகளில் பெற்றுவிடலாம். உலகின் பலநாடுகளிலும் சிறுபான்மை இனமக்கள் தமது உரிமைகளைப் முடியாது.

பல்கலைக்கழகம் எந்த மொழியில் என்பதல்லப் பிரச்னை. எங்குநிறுவ வேண்டும் என்பது இன்றைய பிரச்னை. யாழ்ப்பாணத்தில் மாணவர் தொகை கூட இருப்பதால் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்திலேயே நிறுவப்படவேண்டும். இப்போதைய நிலையில் திருமலையில் இருமொழிப்பல்கலைக்கழகம் அமைத்தால் விரைவில் தனிச் சிங்களப்பல்கலைக்கழகமாகிவிடும்.

இரத்மலானை இந்துக் கல்லூரிக்கும் இத்தகைய அபாயமே ஏற்பட்டது! திருமலையில் தமிழ்மாணவர்தொகை கூடும்பொழுதுதான் அங்கே பல்கலைக் கழகம் அமைக்க அந்நகரம் வெள்ளத்தில் மூழ்கிவிடும் என்று புவியியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர்,

ஆதலால் கட்டாயம் மகாவலி யாழ்ப்பாணம் வந்தே தீரும் என்பதில் ஐயம். இல்லை.

யாழ்ப்பாணம், வெள்ளி
உடுவில் எம். பி. திரு வி. தருமலிங்கத்தின் முயற்சி காரணமாக ஏழாலை உபதபால் நிலையத்தில் தந்தி விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏழாலை கிராம சபைத் தலைவர் திரு. க. சிவகுருவுக்கு உடுவில் எம். பி.யினால் அனுப்பப்பட்ட தந்தி முதலில் விநியோகம் செய்யப்பட்டது. (மல். நி.)

# மஞ்சள் குங்குமம்



ஈழத்தில் தயாராகி இப்போது நாடெங்கிலும் ஓடிக்கொண்டிருக்கும் கீதாலய பிலிம்சாரின் 'மஞ்சள் குங்குமம்' படத்தில் ஒரு முக்கிய கட்டம். கதாநாயகன் ஸ்ரீ சங்கரும், கதாநாயகி ஹெலன் குமாரியும் இந்தக் காட்சியில் உருக்கமாக நடித்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லோருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக கடவான். — இயேசு

# ஈழநாடு

Eelanadu N. tional Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 7-ந் திகதி (20-3-70)

## இந்து சமய பாடம்

இலங்கை பள்ளிக்கூடங்களிலே மாணவர்களுக்கு அவரவர்களின் சமயங்களைப் போதிப்பதுடன பரீட்சைக்கு அதை ஒரு பாடமாக வைத்துள்ளதும் நம் மாணவரிடையே சமய அறிவு பரவ பெரிதும் உதவியுள்ளது. இங்குள்ள இந்துசமய ஸ்தாபனங்களையும், அறிஞர்களையும் கலந்துகொண்டே, கல்வி அதிகாரிகள் இந்துசமய பாடத்திட்டத்தைத் தயாரித்தார்கள். புதிதாக இவ்வித திட்டத்தைத் தயாரித்து நடத்துகையில், நடைமுறையிலே சில குறைகளைக் காண்பது இயற்கை. அக்குறைகளைத் திருத்தி நிறைசெய்யவேண்டியதும் விரும்பத்தக்கது. அவ்விதம் செய்யுமுன், இந்துசமயஸ்தாபனங்களையும் கலந்து, அவர்களது கருத்துக்களை அறிந்து கொள்வதே முறை ஆனால் இங்கு கல்வி அதிகாரிகள் அவ்விதம் கலந்துகொண்டதாகத் தெரியவில்லை. கல்வி பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சைக்கான இந்துசமய பாடங்களை திடீரென பெரிதும் மாற்றி அறிவித்திருக்கிறார்கள். அதனால் இங்கு பல இந்துசமய ஸ்தாபனங்களிடமிருந்தும் அறிஞர்களிடமிருந்தும் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையிலே கல்வி அதிகாரம் இந்துக்களல்லாதவர் கையில் இருப்பதால், கல்வி அதிகாரிகள் இவ்விஷயமாக எவ்வித மாறுதலும் செய்ய முன்பாக, இந்து மாமன்றம், யாழ்ப்பாண சைவபரிபாலனசபை, ஸ்ரீராமகிருஷ்ணமடம், இவை போன்ற ஸ்தாபனங்களையும் அறிஞர்களையும் கலந்து, யோசித்து, அவர்களது பொதுக்கருத்துக்களைத் தழுவி, தக்க திருத்தங்களைச் செய்வது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. அரசாங்க கல்விச் சேவையிலுள்ள ஒருசிலரின் முடிவுக்கு இதை கல்வி அதிகாரிகள் விட்டுவிட்டதாகத் தெரிகிறது. இந்து சமய ஸ்தாபனங்களையும் உத்தியோகப் பற்றற்ற சமயப் பெரியார்களையும் முன்போல் கலந்துகொண்டிருப்பின் இன்றைய அவலநிலை ஏற்பட்டிராது. பாடதிட்டங்களை மாற்றுவதாயின், முன்கூட்டியே நிதானமாக ஆலோசித்து முடிவுசெய்ய வேண்டும். அதுவும் சமய விஷயத்தில் அதிக கவனமாக இருக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை இந்துசமய ஸ்தாபனங்கள் பலவும் எதிர்ப்பதால், இந்துசமயபாட புதிய திட்டத்தில் தக்க திருத்தங்களை கல்வி அதிகாரிகள் செய்யாமல் இருக்க முடியாது பல சைவ ஸ்தாபனங்களும், அறிஞர்களும் கலந்து ஒத்துழைத்து கல்வி அமைச்சரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கண்டு தக்க திருத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும், பள்ளிக்கூடங்கள் திறந்து மூன்று மாதங்களாகின்றன. சமயபாட விதானத்தைத் திருத்துவதற்கு இனியும் அதிக தவக்கமாயின், அது நம் மாணவர்களைப் பெரிதும் பாதித்து, குழப்பம்செய்யும் சமயபடங்களை திருத்தவோ மாற்றவோ வேண்டுமாயின் அதை கல்வி அதிகாரிகள் ஒருதலைப்பட்சமாகச் செய்யாமல், சமயத் தலைவர்களையும் ஸ்தாபனங்களையும கலந்து கொண்டே செய்ய வேண்டுமென்பதை அதிகாரிகள் இதற்கிடையேஉணர்ந்திருக்க வேண்டும்' மீண்டும் மாற்றங்களைச்செய்ய இவ்வாண்டில் போதிய அவகாசமில்லாவிடில், பழைய பாட விதானத்தையே இவ்வாண்டிலும் நீடித்து, புதுவருடத்தில், விரும்பத்தக்க புதிய சமயபாட திட்டத்தைக் கொண்டுவருவது விவேகமாகும்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

## வேலணையில் இன்று இசைக்கலைப் பெருவிழா

மார்ச் 20-ம் 21-ம் 22-ம் திகதிகளில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் இசைவிழா கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன.

# தமிழிசையில் மரபு தவறாத திருப்பம் காணவேண்டும்

— சரவணையூர் செ. கி. சம்பந்தர் —

உலகப் பொருள்கள் அனைத்திலும் கலை இடம் பெற்றுள்ளது. நமது பிறவிக்குத் தாயாகிய தமிழ்மொழி இனிய பல கலைகளுக்குப் பிறப்பிடமாக விளங்குகின்றது கல்லிலேகூட கலை வண்ணங்கண்டு மகிழ்ந்த தமிழர்களுடைய வாழ்வைக் கலைகள் உலகுக்கு உணர்த்துகின்றன. அக் கலைகளை உலகுக்கு வழங்கும் விண்ணோங்கிய கோபுரங்களும் வியப்புமிக்க சிலை, சித்திரங்களும், பேசும் இலக்கியங்களும் இன்றும் நம் முன்னே நலம்பெற்று வாழ்கின்றன. ஆடுதல், பாடுதல்தொடங்கி அழகிய கட்டிடங்களை அமைத்தல் வரை அனைத்தும் கலைகளெனவே கொள்ளப்பெறுகின்றன. எல்லாக் கலைகளிலும் திட்பமும், நுட்பமும் செம்மையும் செறிவும் நலமும் சேர்ந்து தமிழர் தம் வாழ்வு நல்ல பண்பட்ட வாழ்வு என்பதை அவை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

நல்ல பண்பாட்டுப் பின்னணியில் வாழ்ந்த நம் முந்தையோர் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என முப் பிரிவுகளாகப் பகுத்து பெயரிட்டுப் பெருமையோடும் பெருஞ் சிறப்போடும் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பது வரலாறு கண்ட உண்மையாக இருக்கிறது.

ஆடல் பாடல்கள் ஒரு சமுதாய வாழ்வை நன்கு எடுத்துக்காட்டக் கூடியன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பழந்தமிழ் நூல்களிலே கலை வளர்த்த தெய்வீகத் தமிழருடைய கதையை யாம்காணலாம். பண்பாட்டு நிலைக்களனாகிய கலை விழாக்கள் பண்டைத் தமிழர்களால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கொண்டாடப் பட்டு வந்ததென அறியக் கிடக்கிறது. மிகப் பழங்காலந்தொட்டே இவ் விழாக்கள் பண்பாட்டின் அடிப்படையில் உண்டாகி வளர்ந்தன. கலை வளர்க்கும் சமுதாயமாகத் தமிழர் சமுதாயம் பண்பாட்டில் கனிந்து வளர்ந்திருக்கின்றது.

தமிழர்கள் கண்ட கலைக

தேல் இசையை எல்லாப் பொருட்களிலும் கேட்கலாமென்று கூறுவர் இசைக்கு இளகாதவர்கள் யாருமே இல்லை. பயிர்கள் கூட இசையைக் கேட்டு அதிகமான செழிப்புடன் வளர்வதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்

''ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாம்''

என்ற இறைவனையே இசையாய், இசைப்பயனாயிருப்பனும் அவனே என்று சுந்தரர்பாடியுள்ளாரெனின் இசையின் சிறப்பை யாம் உணரக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை மன்னன் இராவணனின் வீணை இசையில் இறைவனுடும் மனதைப் பறிகொடுத்ததாக அறிகிறோம் ஏராளமாக எழுதப்பட்டிருக்கும் பக்தி இலக்கியங்களெல்லாம் இசையோடு படித்து இறைவனை வழிபடுவதற்கென்றே பாடப்பட்டவைகளாகும் இசை மனித உள்ளத்தைப் பண்படுத்தி வளமுறச் செய்து ஆன்ம ஈடேற்றத்திற்குக் கூட உறுதுணை செய்யக்கூடியது. இதனை நன்குணர்ந்த தமிழர் முத்தமிழ்கலைகளிடையேஇசைக் கலையை நடுநாயகமாக வைத்துப் போற்றி வந்திருக்கின்றனர். ''ஆடல் பாடல் இசையே தமிழே!'' என்று புகழ்ந்துவந்திருக்கின்றனர்.

தமிழரது நாகரீகத்தின் உயிர் நாடியான தமிழிசை கலை ஊக்கத்துடன் போற்றப்பட்டு வளர்க்கப்பட வேண்டியதொன்றாகும். மொழிவாழ விழாவெடுக்கும் மரபை முழுஉலகத்திலும் தமிழர்கள் மாத்திரமே கொண்டிருக்கிறார்கள் அத்துணை சிறப்பு வாய்ந்த தமிழ் மொழி பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டுமாயின் தமிழிசை முழங்க வேண்டும்.

த[...]ர்களுடைய பாரம்பரிய கலாச்சாரம் கால வெள்ளத்தால் குறைவுபடாமல் இருப்பதற்குத்தமிழி[...]சையும் [...] செ[...]ன்றது [...] தோ[...]ம் தமிழிசை விழாக்கள் நடைபெற வேண்டும்.

டும். சூழ்நிலைக்கு ஏற்பமரபு தவறாமல் தமிழிசையில் புதுத்திருப்பம் காணவேண்டும்.

இசைக்குவிழா எடுப்பதன்மூலம் இவ்வித தருப்பங்களை ஏற்படுத்தலாம். வேலணையில் இவ்விதம் பெருவிழா எடுக்கும் இசையாளர்கள் சங்கம் மிகுந்த பாராட்டுக்குரியது. அதன் செயலாளர் ஆர்வமும் ஆற்றலும் நிறைந்த திரு பி சுந்தரசேகரம் இசையாசிரியருக்கு இசை உலகமும் ஈழத்தமிழர் சமுதாயமும் பெரிதும் கடமைப்பாடுடையது

வளரட்டும் இசைக்கலை: வாழ்க இசையாசிரியர்கள் நற்றொண்டு.

## 'ஆங்கில அறிவு குறைவது உண்மைதான்'

— ஸ்கந்தா அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஆங்கில அறிவு மாணவரிடையே குறைந்துவருகின்றது என்று கூறப்படுவது உண்மைதான். தாய்மொழி போதனை மொழியாகியவுடன் இந்த நிலைமை நாடு பூராவும் நிலவிவருகிறது. இது ஒரு பகுதியில் மட்டும் காணபபடும் குறையல்ல. இந்நிலையில் எமது பாடசாலையில் சிறந்தமுறையில் சேவையாற்றிவந்த ஆங்கில ஆசிரியர் திரு. ஏ ஜி. என். விஜயரத்தினம் எம்மைவிட்டுச்செல்வது கல்லூரிக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.''

இவ்வாறு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலிருந்து காரைநகர் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றலாகிச் செல்லும் திரு ஏ. ஜி. என் விஜயரத்தினத்தின் சேவையைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் கல்லூரி அதிபர் திரு. பி. ஏகாம்பரம் கூறினார்.

ஆசிரிய மன்றத்தினரால் நடாத்தப்பட்ட இவ்விழாவில் நடாத்தப்பட்ட இவ்விழாவில், திருவாளர்கள் வாகீசர், சிவகுமாரன், துரைராசா, கதிர்காமநாதன். ஆறுமுகம் ஆ. கல்யாணசுந்தரேசன் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

## திண்டுக்கல்லிலிருந்து விதை வெங்காயம் வரும்

## செலாவணி அனுமதிக்கப்பட்டதாம்

கோப்பாய். வியா.

வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர்களுக்கென தமிழ்நாடு திண்டுக்கல்லிலிருந்து விதைவெங்காயம் இறக்குமதி செய்யப்படவுள்ளது. இதனை இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணிக்கு உணவு விவசாயஅமைச்சு அனுமதியளித்துள்ளது.

இத்தகவலை நேற்[...] பகுதி உற்பத்திவினை பொருட் சங்கசமாஜ டைரக்டர்களிலொருவரும் [...] தெற்கு [...] நோக்குக் கூட்டுறவுச் [...] தலைவருமான திரு. தி பர

இந் நடவடிக்கையெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தாம் தமிழ்நாடு சென்று பொள்ளாச்சி, சிவகாசி, சிவில்லிபுரம் ஆகிய இடங்களில் இதுபற்றி விசாரணை செய்ததாகவும் இறுதியில் திண்டுக்கல் கூட்டுறவு விற்பனையாளர் சங்கம் விதை வெங்காயமளிக்க ஒப்புக்கொண்டுள்ளதெனவும் இப்போக முறைக்கு 20,000 அந்தர் காய் 4 தவணைகளில் திண்டுக்கல்லில் இருந்து தூத்துக்குடித் துறைமுகம் வழியாக யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்

## ஐயாறன் எழுதுவது

இதுவரை என்றுமில்லாதபடி திருக்கேதீச்சரத்திலே இம்முறை சிவராத்திரிக்கு அதிக கூட்டம். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு முதலிய பல திசைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் முதல் நாளிலிருந்தே குவிய ஆரம்பித்துவிட்டார்கள். மன்னார் இராணுவ பீதியால் இம்முறை கூட்டம் அதிகம் வராதோ என்று சிலர் கருதினர். ஆனால் இராணுவ முகாம்களில் இருந்த பலருக்கும் விடுமுறை அளித்ததால் அவர்கள் அங்கில்லை. மூன்று நாட்கள் தொடர்ந்து விடுமுறை வந்ததால் அதிகமானவர்கள் திருக்கேதீச்சரம், கதிர்காமம் முதலிய ஸ்தலங்களுக்குச் செல்ல முடிந்தது

அதிகமான கூட்டம் வந்ததால் மக்களிடையே பக்தி அதிகரித்துள்ளதாகக் கருத முடியாதென்றும், ஏதோ உல்லாசப் பொழுதுபோக்காகவும் வேடிக்கையாகவுமே பலரும் அங்கு வந்ததாகவும் ஓர் அன்பர் எழுதி, தீர்த்தக் காவடியை இளம் பெண்கள் எடுக்கப்படாதென்றும் குறிப்பிடுகின்றார். ஆனால் சிவராத்திரி அன்றிரவு 1 மணிக்கு சுமார் 200 பேர் மேற்குப் பிரகாரத்திலுள்ள புராதன சிவலிங்கதின் முன்பாக அமர்ந்து, அமைதியாக ஒரு பெண்மணி சிவபுராணம் சொல்ல மற்றவர்களும் தொடர்ந்து சொன்னதைக் கேட்டேன். அந்தப் பனிக்காற்றிலே ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுத்து தீர்த்த பாத்திரத்தை வாங்கி, சுவாமியின் திருமுன்பாக சிவபுராணம் சொல்லி, வரிசையாக பாலாவிக்குச் சென்று ஸ்நானம் செய்து, தீர்த்தக் குடத்தை சிரம் மேல்தாங்கி பயபக்தியுடன் மீண்டும் சிவநாமங்களைச் சொல்லிக் கொண்டு வந்த காட்சியைக் கண்டவர்கள் அவர்களுக்கு பக்தியில்லை என்று எப்படிக் கூற முடியும். வழியிலே சிலர் கட்டைகளை எரித்துக் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அந்தக் குளிரிலே பாலாவியில் தோய்ந்து, ஈர வஸ்திரத்துடன் கோவிலுக்கு தீர்த்தத்துடன் தெய்வ நினைப்பாகவே நடந்து சென்று அந்தப் புராதன சிவலிங்கத்தின்மீது தீர்த்ததை கைபடாமல் தாங்களே அபிஷேகம் செய்

'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரை மேல்தேவன் எனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே' என்ற சுந்தரமூர்த்தி நாயனார்வாக்குப்பொய்யாகுமா? சைவம் பல ஆபத்துக்களுக்கும் தப்பி இன்னும் தலைதூக்கியுள்ளதென்றால் அதற்கு சைவப் பெண்மணிகளே பெரிதும் காரணமென்பதில் சிறிதும் ஐயமில்லை. சைவத்தின் எதிர்காலம் மிக மேலோங்கி இருக்கப் போகிறதென்பதற்கு அவ்வளவு இளம் பெண்கள் தீர்த்தக் காவடியில் பக்தியுடன் கலந்து கொண்டது. நல்லதோர் அத்தாட்சியாக விளங்கியது

அங்குள்ள புராதனபெரிய சிவலிங்கம் வெகுகாலம் மண்ணுக்குள் புதைந்திருந்து சுமார் 100 வருடங்களுக்கு முன் மீண்டும் கிடைத்ததாம். அது புண்பட்ட திருமேனி. போர்ச்சுக்கீயரால் சற்றே அடிபட்டதாம். அந்த மூர்த்தியை மீண்டும் பூசைக்கு வைக்கலாமோ என்று சந்தேகம். அதனால் கோவிலுக்கு முன்புறத்தில் பல வருடங்கள் இருந்து வந்தது. பிறகு அதை மேற்கு பிரகாரத்தில் ஸ்தாபித்து பொதுமக்களின் அபிஷேக வழிபாட்டுக்கு வைப்பதுபற்றிய கேள்வி எழுந்தபோது சில 'அறிஞர்கள்' அவ்விதம் செய்யக் கூடாதென்றும் அது ஆகமத்துக்கு மாறுகுமெனிறும் பயமுறுத்தினராம். ஆனால் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ ஈசானசிவாச்சாரியார் இங்கு வந்தபோது அந்தச் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பொதுமக்கள் அபிஷேகம் செய்து வழிபடுவதில் தவறில்லை என்று கூறியபின்பே காலஞ்சென்ற சேர் கந்தையா வைத்தியநாதன், அதை பிரதிஷ்டை செய்விக்கச் செய்து பொதுமக்களின் தீர்த்தக்காவடிக்கும் ஒழுங்கு செய்ததாக அறிந்தேன். நாமே நேரில் சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபடுவதில்தான் எவ்வளவு இன்பம். நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு எல்லையற்ற இன்பம் பெற்று உள்ளம் தூய்மை பெற்று புதுமனிதர்களாகத் திரும்புவதைக் கண்டேன். 'எல்லாம் அவன் செயல்' 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்ற வேதவாக்கு உண்மையாயின் அங்கு நமக்கும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருத்தங்களைச் செய்வது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. அரசாங்க கல்விச் சேவையிலுள்ள ஒருசிலரின் தில், விரும்பத்தக்க புதிய சமயபாட திட்டத்தைக் கொண்டுவருவது விவேகமாகும்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# கிருமிநாசினியால் ஏற்படும் மனித அழிவை தடுக்கவழி

கிருமிநாசினி-இது கேட்ட மாத்திரத்தே பயம் தரும் சொல்லாகிவிட்டது இன்று. இதை நாம் சொல்லும் போது அடையும் அச்சம்-கலக்கம் நினைக்கவே பயமாக இருக்கிறது. பயங்கரமான இந்த வஸ்துவை நாம் அன்றாடம் பாவிக்கும் நிலைமை வந்துள்ளது. ஒவ்வொரு விவசாயினுடைய வாழ்க்கையிலும் இது பின்னிப் பிணைந்து சீனி, தேயிலை போன்று சர்வசாதாரணமான பொருளாகிவிட்டது.

இந்தக், கிருமிநாசினி எத்தனை இளம் குடும்பங்களை நிர்க்கதிக் குள்ளாகியுள்ளது. எத்தனை பெற்றோர்களைக் கண் கலங்க வைத்திருக்கிறது. வைக்கிறது எத்தனை இளம் காதலர்களை -துடிக்கும் இதயங்களை -வாழ நினைக்கும் பிஞ்சுள்ளங்களை, வேருடன் சரித்திருககிறது; சரித்து வருகிறது.

திருமணமாகி ஒருவருடம் கூட ஆகவில்லை. வாழ்க்கையைச் ரசித்துச் சுவைக்கும் காலமிது. வாழவிட்டதா இந்த நாசினி. இதனிடம் தஞ்சம் புகுந்தவனை முறையாக வஞ்சித்துவிட்டது. ஆயிரம் ஆயிரம் இன்பக் கோட்டைகளைக் கட்டி அதனுள் ஒடி ஆடி மகிழலாம் என்று கனவு கண்டிருப்பாளே அந்த இளம் மனைவி, இன்று அவள் பொட்டு இழந்து பூ விழந்து, பொலிவிழந்து—இருண்ட எதிர் காலத்தை நோக்கிக் கதறி அழுது புலம்புகிறாளே.

'ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் இச்சமுதாயம் எம்மை ஒன்று சேரவிடாது நாம் செல்லும் மறு உலகத்தில் என்றாலும் ஒன்றுசேர எத்தனிப்போம்' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டுக் கிருமிநாசினியை நாடிய எத்தனையோ இளம் காதலர்களைப்பற்றி அன்றாடப் புதினப் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

இத்தகைய கொடிய நாசினி நமக்குதேவைதானா? அவசியம் தேவையானல் இதற்கொருகட்டுப்பாடுஇல்லையா? கட்டுப்படுத்த முடியாதா?

முடியுமென்றே சொல்லலாம், விவசாயத்துறை மேலதிகாரிகள் இதுபற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

கிராமந்தோறும் அமைந்துள்ள பயிர்ச்செய்கைக் குழுக்களிடம் கிருமிநாசினி பொறுப்பை ஒப்படைப்பதன்மூலம் இதன் அபாயத்தை தடுக்கலாம். இந்த விவசாயக் குழுக்களிடம் விவசாயிகள் தத்தமது தேவைகளை எடுத்துரைத்தால் அவ்வப்பகுதிக் குழுக்கள் அவர்களின் தேவைக்கேற்றவாறு கிருமிநாசினி தெளிப்பதைக் கையாளலாம். இதற்கு விவசாயக் குழுக்கள் கிருமிநாசினி தெளிப்பதில் பயிற்றப்பட்டவர்களை உபயோகிக்கவேண்டும், கடைகளில் கிருமிநாசினி விற்பதையும் அரசாங்கம் முற்றாகத் தடுக்க வேண்டும்,

மேற்கூறப்பட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டால் நிச்சயம் கிருமநாசினியால் ஏற்படும்மனித அழிவைத் தடுக்கலாம்.

— க. நாகலிங்கம்

அளவெட்டி

0 0 0

## இந்துசமய பாடம்

கல்விபொது (உயர்தர) தாரதரப் பரீட்சைக்கான இந்துசமய பாடத்தைப் பற்றிய புதிய பாடவிதானத்திலே முககியமான திருத்தங்களைச் செய்யவேண்டியுள்ளது. இந்து ஸ்தாபனங்களும், அறிஞர்களும் உடன் அவசரமாகக கூடி, தங்களிடையே ஒத்துழைத்து அவ்வித திருத்தங்களை செய்விக்கவேண்டியது இந்துசமயக் கல்வி, கலாசார நன்மைக்கு அவசியமாகும். கல்வித்திணைககளம், இந்துக்களல்லாதவர்களின் அதிகாரத்தில் இருக்கலாம். ஆனாலும் விரும்பத்தக்க திருத்தங்களை செய்யவேண்டியதைப்பற்றி தவக்கமின்றி தக்கபடி தெரிவித்துக்கொண்டால் அதை நிறைவேற்ற அவர்கள் மறுக்கமாட்டார்களென்றே கொள்ளலாம்.

இனி எதிர்காலத்தில்இந்து சமய பாடங்களைப் பற்றிய பாடத்தைத் தயாரிக்கு முன்பாக, இந்துககளின் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் தெரிந்துகொள்ள நடவடிக்கைகள் எடுப்பது பெரிதும் விரும்பத்தக்கது.

திரு. எஸ் சிவசுப்பிரமணியம்
103/2, கோட்டை வீதி
கொழும்பு — 12

இவ் விழாக்கள் பண்பாட்டின் அடிப்படையில் உண்டாகி வளர்ந்தன. கலை வளர்க்கும் சமுதாயமாகத் தமிழர் சமுதாயம் பண்பாட்டில் கனிந்து வளர்ந்திருக்கின்றது.

தமிழர்கள் கண்ட கலைகளுள் இசைக் கலை தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு இன்பக் கலையாகும் மக்கள் அறிந்த மிக உயர்ந்த நன்மையாகிய கலையும் இசைக் கலையேயாகும். காதுகள் உள

தமிழர்களுடைய பாரம்பரிய கலாச்சாரம் கால வெள்ளத்தால் குறைவுபடாமல் இருப்பதற்குத்தமிழிசையும் பெரும்பங்கினைச் செய்கின்றது. கிராமங்கள் தோறும் தமிழிசை விழாக்கள் நடைபெறவேண்டும் உள்ளூர் இசைக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்படல்வேண்டும் பொதுமககளின் கவனம் தமிழிசையின்பால் ஈர்க்கப்பட்டு புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் தோன்றவேண்

# தமிழும் இசையும்

— வேலணையூரன் —

இனிமை தரத்தக்க ஒலிகளை இசைதொலிப்பது இசை எனப்படும். இசை பாடுதற்கு ஏற்ற இனிய மொழி தமிழ். இனிமையும், இளமையும் வளனும் வளர்ச்சியும் சுவையும் சுருதியும் உடைய மொழி தமிழ். பாடிப் பரவி பக்தி செய்வதற்கு வாய்ந்தமொழிதமிழ். கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கிய மெய்யடியார்கள் இசையால் இறைவனை வாழ்த்தி வணங்கினர். தமிழ்ப் பாடல்களும் பாசுரங்களும் தேவாரமும் திருவாசகமும் உள்ளத்தை உருக்குவன. உள்ளத்தை உயர்த்துவன. தமிழ் பக்தி மொழி. நீள நினைந்து அன்பினில் குழைந்து பாங்குடன் பாடினல் பக்தி வெள்ளம் பரவும்.

பாவலர் பாடல்களிலும் காதலர்கானங்களிலும் தாயறிந்த தாலாட்டுகளிலும் மற்றும் நாட்டுப்பாடல்களிலும் அம்மானை ஊஞ்சல் பாடல்களிலும் ஏனைய மங்கலப் பாடல்களிலும் ஏன் அமங்கலப் பாடல்களிலும் யாழிலும் குழலிலும் வீணையிலும் பறையிலும் தோன்றுவது இசை. இவ்விசை இறையன்பை வளர்க்கும் இன்பத்தைப் பெருக்கும். ''செவிக்குணவு இல்லாத போது சிறிது, வயிற்றுக்கும் ஈயப்படும்'' என்றார் வள்ளுவர். தமிழர் வாழ்வு இசையோடு இயைந்திருந்த சிறப்பைக் காணலாம்.

வேலணையூர் இசைமணங்கமழும் திருவூர் இசைக்கலைஞர்கள் இசை அபிமானிகள் இசையறிஞர்கள் இங்குளர். எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவநெறிச் செல்வர்கள் வாழுமூர். இதனல் இவ்வூர் மக்கள் மிகப் பழங்காலந் தொட்டே இறையன்பில் மூழ்கித் திளைத்தனர். இறைவன் புகழை இசைத்து மகிழ்ந்தனர். இசைகொண்டேத் தித்துதித்தனர். இசைவளர்த்தனர். இது திருமுறை மகாநாடு நடைபெற்ற திவ்வியவூர். அத்தகைய ஊரில் இசைவிழா நடைபெறுவது சாலப் பொருத்தமுடையது

### இன்றைய நிகழ்ச்சிகள்

வேலணையில்இன்றுஇசைக் கலைப் பெருவிழா நடைபெறுகிறது. வேலணைமத்தியமகாவித்தியாலயத்தில் இன்று ஆரம்பமாகும் இவ்விழா தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் இன்றைய நிகந்ச்சிகள் தீவுப்பகுதி எம்பி திரு வி நவரத்திம் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிவிபரம் வருமாறு:

மாலை 4-00-500 விழா ஆரம்பம்-மங்கள வாத்தியம் திரு. எம் வடிவேலு செற், மாலை 5-00-510 திரு ஈ மாணிக்கம் விழாவை ஆரம்பித்துவைப்பார், மாலை 5-10-5-15 ஆசியுரை: ஐ கைலாசநாதக்குருக்கள், மாலை 5-15-6-00 பாட்டு: திரு. எஸ் லிங்கம் சகோதரர்கள் மாலை 6-00 6-45 பாட்டு: செல்வி ரி மங்கையற்கரசி, மாலை 6-45-730 பாட்டு: திரு எஸ் பாலசிங்கம், திரு வி பரமசாமி அரியாலைச் சகோதரர்கள். இரவு 7-30-800 தலைமையுரை பிரதமவிருந்தினர் யாழ் அரசாங் அதிபர் திரு. எவ். ஸி. பீற்றர்ஸ் சிறப்புரை, இரவு8-00-8-45 பாட்டு: செல்வி நேசபூபதி நாகலிங்கம், இரவு 8-45-9-30 பாட்டு: திரு. ரி.ராஜலிங்கம், திரு. ரி. பாலசுந்தரம். இரவு 9-30-10-15 பாட்டு: செல்வி நாகம்மா கதிர்காமர்.

...த்துள்ளது.

இத்தகவலை நேற்று... பகுதி உற்பத்தியாளர் பொருட் சங்கசமாஜடைரக்டர்களிலொருவரும் கோப்பாய் தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவருமான திரு. தி பரமானந்தராசா என்னிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்து உற்பத்தியாளர்களின் விதைவெங்காயம் தரமற்றதென்றகுற்றச் சாட்டைத் தொடர்ந்து ...கொண்டுள்ளதெனவும் இப்போக முறைக்கு 20,000 அந்தர் காய் 4 தவணைகளில் திண்டுக்கல்லில் இருந்து தூத்துக்குடித் துறைமுகம் வழியாக யாழ்ப்பாணத்திற்கு இறக்குமதி செய்யப்படுமெனவும் அவர் கூறினர்.

சிறுவெங்காய உற்பத்தி நிர்வாகசபையும் இதற்காவ சம்மதத்தை தெரிவித்துள்ளதாம்.

5 நாட்கள் கடலில் தத்தளித்து

# தொண்டிக் கரை அடைந்த 5 இலங்கை மீனவர்

கோப்பாய், வியாழன் காணமற்போன படகைத் தேடிச் சென்ற வள்ளம் ஒன்று இயந்திரத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறினல் நடுக் கடலில் ஐந்து கடற்றொழிலாளருடன் 5 நாட்கள் தத்தளித்துள்ள பரபரப்பூட்டும் சம்பவம் ஒன்று சமீபத்தில் நடைபெற்றுள்ளது.

கரையூரைச் சேர்ந்த ஆர். மரியநாயகம் என்பவருக்குச் சொந்தமான 'வசந்த ராணி' என்ற வள்ளத்தில் சென்ற தேவசகாயம் மத்தியூஸ். சூசைப்பிள்ளை யூலியஸ், தோமஸ், தர்மசேனு. செல்லக்குமார் ஆகிய ஐவரும் கடலில் உணவும் நீருமின்றி அல்லலுற்றனர். வள்ளத்தில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 54 வலைகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இராமநாதபுரம் தொண்டித் துறைமுகத்தில் நாகபட்டினம் சுங்க இலாகா, பொலிஸ் பகுதியினர் மேற்படி ஐவரையும்கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துளளதாகவும், வலைகளையும் வள்ளத்தையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தை தொடர்ந்து கடற்றொழில் ஆலோசகரும், கோப்பாய்க் கிராமசபைத் தலைவருமான திரு. தி. பரமானந்தராசா இந்திய ஹைகமிஷன், வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் அனுமதியுடன் தமிழ்நாடு சென்று, மதுரை இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி, நாகபட்டினம், தமிழ்நாடு சுங்க இலாகாப் பகுதியினருடன் தொடர்புகொண்டு எடுத்த நடவடிக்கைகளின் பயனக காவலில் வைக்கப்பட்ட ஐவரும் விடுதலைசெய்யப்பட்டதுடன், வலைகளும், வள்ளமும் திருப்பிக்கொடுககப்பட்டன.

யாழ்ப்பாண

# கூட்டுறவு முறைக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

உடும்பராய், வியா நமது நாடு முன்னேறுவதற்குகூட்டுறவு முறையே மூலகாரணமாயுள்ளது. உரும்பராய் ஐக்கிய பண்டகசாலை நிர்வாகிகள் பெருமுயற்சியால் இப் பண்டகசாலை மிகவும் முன்னேறியிருப்பதுகண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் மக்கள் இன்னம் அங்கத்தவர்களாகச் சேர்ந்து சங்கத்தைப் பலப்படுத்த வேண்டிய முயற்சிகள் செய்யப்படவேண்டும், கூட்டுறவு முயற்சியால் இலங்கையில விசேடமாக யாழ்ப்பாணத்தில் வெங்காயப்பயிர் நன்கு விருத்திபெற்றுள்ளது. கூட்டுறவு அடிப்படையில் விவசாயப் பயிர்களை ஊக்கமாகப் பயிரிட்டு பெருவெற்றி கண்டிருப்பது மிகவும் பாராட்டக் கூடியதே உரும்பராய் ஐக்கிய பண்டகசாலைப் பிரதம வாயிலை சென்ற புதன்கிழமை மாலை திறந்துவைததுப் பேசிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு எவ்.ஸீ. பீட்டர்ஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்:

ஐக்கிய பண்டகசாலைத் தலைவர் திரு சி. செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழாவில் அரசாங்க அதிபரவர்களும் கூட்டுறவு அதிகாரிகளும் உரும்பராய் சந்தியிலிருந்து மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

தலைவர் திரு சி. செல்வத்துரை தமது தலைமையுரையில் எமது அரசாங்க அதிபர் திரு பீட்டர்ஸ் கூட்டுறவுப் பாதையில் மிகுதியான அக்கறையுள்ளவர், சமுதாய ஒற்றுமைக்கு அரசாங்க அதிபர் செய்யும் முயற்சி பெருந்தொண்டாகும் என்றார்.

கூட்டுறவுஆக்கச் சிரேட்ட உதவி ஆணையாளர் திரு. க. சி. பொன்னுத்துரைமேல் மாடி மண்டபத்தைதிறந்து வைத்துப் பேசினர். திரு வீரசிங்கம் நன்றியுரை கூறினர்.

25-ம் 26-ம் ஆண்டுகளின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு சி. செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவின்போது திரு சி, செல்வத்துரை தலைவராகவும் திரு மு. வ, இராசரத்தினம் காரியதரிசியாகவும் திரு மு. வைத்திலிங்கம் தனதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பாலாவியில் தோய்ந்து, ஈர வஸ்திரத்துடன் கோவிலுக்கு தீர்த்தத் துடன் தெய்வ நினைப்பாகவே நடந்து சென்று அந்தப் புராதன சிவலிங்கத்தின்மீது தீர்த்த்ததை கைபடாமல் தாங்களே அபிஷேகம் செய்கையில் அவர்கள் பக்தி பரவசமடைந்திருந்ததை அவர்கள் முகம் தெரிவித்தது. அந்த அபூர்வக்காட்சியை தரிசித்தவர்கள் உள்ளங்களும் நெகிழ்ந்தன. இவ்வித காட்சியை திருக்கேதீச்சரம் தவிர உலகில் வேறெங்கே காண முடியும்? காசியிலே இவ்விதம் சிவலிங்கத்துக்கு மக்கள் தாங்களே அபிஷேக பூசை செய்வதாகத் தெரிகிறது. ஆனல் சிவராத்திரியன்று இவ்விதம் ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி, சிவபுராணம் பாடிககொண்டு வந்து அபிஷேகம் செய்வது சைவ உலகிலேயே திருக்கேதீச்சரத்தில் மட்டும்தான்என்று என் நண்பர் ஒருவர் தெரிவித்தார். இதைக் கேட்க பெரு மகிழ்ச்சியாக இருந்தது.

இளம் பெண்களே அதிகமாகத் தீர்த்தக் காவடியில் கலந்து கொண்டதைக் கண்டேன். இது அவர்கள் குற்றமா? சிவராத்திரியன்றும், மறுநாளும் சுமார் 25கோஷ்டிகள், தீர்த்தக்காவடி எடுத்கதாகத் தெரிகிறது. கோவில் திருப்பணிக்கு இதனல் நல்ல வருமானம். இதில் கலந்து கொண்டவர்கள் மட்டுமன்றி, பார்ப்போர் உள்ளமும் தூய்மை அடைந்திருக்க வேண்டும்.

...உள்ளம் தூய்மை பெற்று புதுமனிதர்களாகத் திரும்புவதைக் கண்டேன். 'எல்லாம் அவன் செயல்' 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்ற வேதவாக்கு உண்மையாயின் அங்கு நமக்கும் தீர்த்தக்காவடி வழிபாடும் இறைவன் செயல்தானே. அதுவும் நன்மைக்குத்தானே.

ஆனல் ஒரு விஷயம். பெணகள் தலைக்கு மேல் சிரங் குவிக்கப்படாதென்று ஒரு நியதியுண்டு. அவர்கள் இரு கைகளையும் முகத்தின் முன் கூப்பி வணங்கலாம். தீர்த்தக் காவடியை தலைக்கு மேல் வைககாமல் இடுப்பில் அல்லது தோளில் தூக்கி வருவது தமிழ்ப் பண்புக்கு ஏற்றதாக இருக்கலாம். அப்படிச் செய்யும் அந்த அன்பரும் இதை ஆட்சேபிக்கமாட்டாரென்று கருதுகிறேன்.

## 'பாலங்களின் அவசியம்'

காலி, வியாழன்

'பாலங்களும், வீதிகளும் முன்னேற்றமடைந்து வரும் நாட்டுக்கு அவசியம்' என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா நேற்று காலியில் நடந்த வைபவமொன்றில் பேசுகையில் கூறினர். காலியில் மகாமோதர பாலத்தை பிரதமர் இன்று திறந்து வைத்தார்.

ஹெலிஹொப்டரில் பிரதமர் காலிக்கு வந்தார். பிரதமரை உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா பொதுவேலைமராமத்து பகுதி அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா ஞானசேகரம்

திருமதி மலர் இராஜசிங்கம், அல்பேர்ட்(PHIKKS கியூபேர்ட்(PWD ஓவசியர், பிபிலை) பாலா (மின்சார சபை கொழும்பு) ஆகியவர்களின் தந்தையும், இராஜசிங்கம் (உதவி சுப்பிரின்டன்ட், டோசற் எஸ்டேட், பம்புவெல) கதலின் சிந்தியா ஆகியோரின் மாமனுருமாகிய திருவாளர் செல்லப்பா ஞானசேகரம் (மலாயன் பென்சனியர்) காலமானர். யாழ்ப்பாணம் 1ம் குறுககுத்தெரு 1வது இலக்கத்திலிருந்து அன்னரின் பூதவுடல் நல்லூர் சென்ஜேம்ஸ்சேமக்காலைக்கு நல்லடக்கம்செய்வதற்காக 20-3-70 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

1497

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென். ஜோன்ஸ் — சென்றல் 72வது மாபெரும் கிரிக்கெட் போட்டி 1970

## சென் ஜோன்ஸ் கல்லூரியை வரவேற்கிறோம்

— மத்தியகல்லூரி அதிபர்

எமது விளையாட்டரங்கில் மீண்டும் சென். ஜோன்ஸ் கல்லூரி வருடாந்த விளையாட்டை விளையாடுவதையிட்டு வீரர்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். யாழ்ப்பாண மத்திய கல்லூரி இத்துடன் 5 வருடமாக தனது விளையாட்டரங்கில் இவ் விளையாட்டுப்போட்டியை வெற்றிகரமாக நடாத்தி வருகிறது. கடந்த வருடங்களில் பாலர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை ஆயிரக்கணக்கானோர் இவ் விளையாட்டைக் கண்டுகளித்தனர். விளையாட்டு அங்கு போதியவசதியுடன் இல்லாமலிருப்பதால் இரசிகர்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க விளையாட்டு நிர்வாகிகளுக்கும் ஜனநெருக்கடியை சமாளிப்பது கஷ்டமாகவே இருக்கிறது. இந்த விளையாட்டை நன்கு ரசித்து அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம், அதிசயமான இந்த கிரிக்கட் விளையாட்டு வாழ்க்கையை பிரதிபலிக்கும் தன்மையது. எனவே இந்த விளையாட்டின் பாரம்பரியத்தைப் பேணி விளையாடுவோமாக.

இ. சபாலிங்கம்
அதிபர்
யாழ் மத்திய கல்லூரி

## இரு கல்லூரிகளினதும் உறுதி நிலைக்கட்டும்

— சென். ஜோன்ஸ் அதிபர்


கிரிக்கட் அதிகம் செலவை உண்டுபண்ணும் ஒரு விளையாட்டு. பீக்ஸ் திட்டத்துடன் இதற்காகும் செலவு மேலும் அதிகரித்துள்ளது. இவ் விளையாட்டுக்கு அதிகம் செலவழிப்பது நீதியானதா? என சிலர் கேட்கலாம்

நல்ல நோக்கத்தோடு விளையாடப்படுமானால் இச் செலவு நீதியானதேயாகும். விலைமதிப்பற்ற இவ் விளையாட்டு ஒழுக்கத்தை நேர்மையை எடுத்து விளக்குவது. சரியான முறையில் விளையாடப்படும் கிரிக்கெட் அவ் விளையாட்டு வீரர்களுக்கு நல்ல கல்வியையளிப்பதோடுமட்டுமன்றி பாடசாலைகளின் மற்ற மாணவர்களுக்கும் நற் போதனையையளிக்கிறது. மத்திய கல்லூரி — பரியோவான் கல்லூரி விளையாட்டில் உறுதிப்பாடுடைய ஆயிரக்கணக்கான ரசிகர்களுக்கும் அது நற் போதனையையளிக்கும்.

மத்திய கல்லூரி சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் இந்த உறுதியான நிலை தளராது தொடர்ந்து நிலவுவதாக.


கே. பூரணம்பிள்ளை
அதிபர்
சென் ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

### சென். ஜோன்ஸ்



கீழ்வரிசை (இடமிருந்துவலம்)
ரி. மனோகரன் எம். ஜெயேந்திரா, எம். ஜெ[illegible]ந்திரா (கப்டன்), ஸி.சிவகுமார்
ரி. தேவபாலன், எஸ். ஸ்ரீராயரட்ணம.
மேல்வரிசை (இடமிருந்துவலம்) ஸி. ரட்ணராஜா, ஆர். ஜி. செல்வநாயகம்
ஏச். அல்போன்சஸ், ஏ. ராஜசூரியர், ரி. பாலஜோதி, [illegible] ராஜதுரை, பி
ஆனந்தலிங்கம், என். ரவீனன்.

### சென்றல்



கீழ்வரிசை (இடமிருந்து வலம்( எஸ், தங்கேஸ்வரன், ஜீ, எஸ். விஜேகரன்
ரி. துயசிங்கம், ஆர். ராஜசிங்கம் (கப்டன்) கே. ஜெயரட்ணகுமார், ஆர். ரஞ்சித்
குமார், எம், ஜெயகுமார்.
மேல்வரிசை (இடமிருந்துவலம்) : எஸ். அபூபக்கர், ஜி. ஆர். ஹண்டி கே. கே.
பிரேமச்சந்திரன், எஸ். ஜெயலிங்கம், ரி, மகேந்திரன். டி. ஜே, நைல்ஸ்,
கே, டி, அ[illegible]

## கூடி வாரீர் ரசிகர்களே!

வீறுய்ப் பந்து வீசிடுவார்
விசிக்கி அடிப்பார், விழிகளெல்லாம்
கூறு குறிப்பாய் நோக்கிநிற்கும்
கொள்வீர் மனதில் பெருமிதமே.

வெள்ளை உடையில் வீரரெல்லாம்
விரிந்த வெளி விளையாடும்
கொள்ளை யழகை பார்த்திடவே
கூடி வாரீர் ரசிகர்களே!

—இரசிகன்

## மத்தியஸ்தர்கள்

திரு. ஏ. நேசதுரை
திரு. கே. சிவலிங்கம்

## விளையாட்டு நடைபெறும் நேரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 20-ம் திகதி: | காலை | 10-30 | — | 12-30 |
| | மாலை | 1-45 | — | 3-45 |
| | ,, | 4-00 | — | 5-45 |
| 21-ம் திகதி: | காலை | 10-30 | — | 12-30 |
| | மாலை | 1-45 | — | 3-45 |
| | ,, | 4-00 | — | 5-45 |

தரமான தங்க - வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
கே. என். எம். மீரான்சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி (போன்: 585) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்றல் கல்லூரி

| பெயர்கள் | 1-ம் ஆட்டம் | 2-ம் ஆட்டம் |
|---|---|---|
| 1. ஆர். ராஜசிங்கம் [கப்டன்] | | |
| 2. எஸ். தங்கேஸ்வரன் | | |
| 3. ஜி. எஸ். விஞேகரன் | | |
| 4. ரி. தயாசிங்கம் | | |
| 5. கே. ஜெயரட்ணகுமார் | | |
| 6. ஆர். ரஞ்சிற்குமார் | | |
| 7. எம். ஜெயக்குமார் | | |
| 8. எஸ். அபூபக்கர் | | |
| 9. ஜி. ஆர். ஹன்டி | | |
| 10. ஐ. கே. பிரேமச்சந்திரன் | | |
| 11. எஸ். ஜெயலிங்கம் | | |
| 12. ரி. மகேந்திரன் | | |
| 13. டி. ஜே. நயில்ஸ் | | |
| 14. கே. டி. அருளானந்தம் | | |

## சென். ஜோன்ஸ் கல்லூரி

| பெயர்கள் | 1-ம் ஆட்டம் | 2-ம் ஆட்டம் |
|---|---|---|
| 1. எம். தெய்வேந்திரன் [கப்டன்] | | |
| 2. ரி. மஞேகரன் | | |
| 3. எம். ஜெயேந்திரா | | |
| 4. சி. சிவக்குமார் | | |
| 5. ரி. தேவபாலன் | | |
| 6. எஸ். ஸ்ரீ ராமரட்ணம் | | |
| 7. சி. ரட்ணராசா | | |
| 8. ஆர். ஜி. செல்வநாயகம் | | |
| 9. எச். அல்போன்சஸ் | | |
| 10. ஏ. ராஜசூரியர் | | |
| 11. ரி. பாலஜோதி | | |
| 12. பி. ராஜதுரை | | |
| 13. பி. ஆனந்தலிங்கம் | | |
| 14. என். நவீனன் | | |

# விழாக்கோலத்தில் சென்றல் மைதானம்

**வடபகுதி கிரிக்கெட் "விசிறிகள்" ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சென்றல் -- சென். ஜோன்ஸ் கோஷ்டிகளின் 72-வது மாபெரும் மோதல் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.**

வீதிகளிலும், கார்களிலும் சைக்கிள்களிலும் இவ்விரு கல்லூரிகளின் வர்ணக் கொடிகளும் பறந்துகொண்டேயிருக்கின்றன. இரு கல்லூரி மாணவர்களது சேட்டுகளிலும் கல்லூரிச் சின்னங்கள் காட்சியளிக்கின்றன. மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி, மாணவிகள் மத்தியிலும்கூட இப்போது இதுதான் பேச்சாகவிருக்கிறது.

## இரு கோஷ்டிகளின் நிலைமை

இவ்விரு நாட்களின் போதும் உணர்ச்சி உச்சக் கட்டத்தை அடைய, போட்டிப் பாடசாலைகளது ஆதரவாளர் பரஸ்பரம் தத்தம் கல்லூரி வீரர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பரித்து உற்சாகம் கொடுப்பதற்காக மத்திய கல்லூரி மைதானத்தை வளைத்துக்கொண்டு முற்றுகை இடுவர். கீச்சிடும் சகோதரப் பெண்கள் பாடசாலைகளின் மாணவிகளது குரலும் ஓங்கி உரத்து ஒலிக்கப்போவது திண்ணம்.

தோல்வியே அறியாத கோஷ்டியாக, இவ்வாண்டு களத்தில் குதிக்கிறது சென் ஜோன்ஸ் கோஷ்டி. இப்பருவ நாளில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடனுன ஒரேயொரு ஆட்டத்தில் தோல்வியுற்ற நிலையில் பெரும் போட்டிக்கு வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறது மத்தியகல்லூரிக் கோஷ்டி. இப்பருவ காலப் போட்டிகளில் விழுப்புண் படாத சென் ஜோன்ஸ் கோஷ்டி, யாழ். இந்து, ஹாட்லிக் கோஷ்டிகளுடன் ஆடிய சந்தர்ப்பங்களில் மனம் கிலேசமடையும்படியாக மயிரிழையில் தப்பிக் கொண்டதையும் நினைவுகூரவேண்டும். யாழ். இந்துவுடன் தோல்வியை எதிர்நோக்கவேண்டிய வேளையில் நிலைமையை வெற்றிகரமாகத் தலைகீழாகப் புரட்டி மயிர்க்கூச்செறியும் வகையில் மூன்று விக்கெட்டுகளால் வாகை சூடியது சென் ஜோன்ஸ் கோஷ்டி. ஹாட்லி கோஷ்டியுடனுன போட்டியில் பாதகமான நிலையை மாற்ற முடியாவிட்டாலும் தீரத்துடன் தாக்குப்பிடித்து ஆட்டத்தைச் சமன்செய்து கொண்டது. யாழ். மத்திய கல்லூரியும் குருநகலை மாலியதேவாவுடனுன போட்டியில் தலைகீழான நிலைமையைச் சாதகமாகச் சமாளித்து ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றிச் சமனுக முடித்துக்கொண்டிருக்கிறது.

இந்த 72-வது வருடாந்த கிரிக்கெட் போட்டியில், வெற்றி தோல்வி எப்படி இருக்குமென சரியாக கூற முடியாவிட்டாலும் இப்போட்டியில் சிறப்பாகஆடும் வீரர்களுக்கு கீழ்வரும் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

'சிறந்த பந்தெறி வீரனுக்கு திரு. டபிள்யூ- பதிமநாதன் சலஞ்ச் கிண்ணமும், சிறந்த துடுப்படி வீரனுக்கு சி. ஏ. டபிள்யூ எட்வட்ரீஸ் சலஞ்கிண்ணமும், சிறந்த பீல்டருக்கு டாக்டர் எச். டபிள்யு. தம்பையா சலஞ்ச் கிண்ணமும், ஆல்ரவுண்டருக்கு மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கம் அளிக்கும் சலஞ் கிண்ணமும் வழங்கப்படும். இப்போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிக்கு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் அளிக்கும் சலஞ் கிண்ணமும் வழங்கப்படும். (தே. நி)

**விளையாட்டு நிருபர்**
**ஏ. தேவராசா**

*For High Quality*

SUITING AND SHIRTING

*Visit*

**LINGAM TEXTILES**

52, Main Street, — Jaffna.

SPECIAL REDUCTION



**Sun Glasses**

AT

**Colombo Opticals**

(Optician : L. M. R. DE MEL)

53, MAIN STREET, — JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org